இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2021. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 145 | இதழ் : 02 | திகதி : 31.01.2021 | விலை : 30.00

## தடைகளைத் தாண்டி அன்பிய வாழ்வில் வளர்ச்சி காண்போம்

### இணையத்தளக் கருத்தமர்வில் யாழ். ஆயர்

இலங்கையில் அன்பியங்கள் உருவாக்கப்பட்டு 25 ஆண்டுகள் கடந்த பின்னரும் இவ் அன்பிய வாழ்வின் இலட்சியங்களை அடைவதற்குப் பல தடைகள் இருந்துகொண்டேயிருக்கின்றன என்று குறிப்பிட்ட யாழ். ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் இவ் அன்பிய ஆண்டில் இவற்றிற்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றையெல்லாம் மேற்கொண்டு அன்பிய வாழ்வில் வளர்ச்சி காண முயற்சிக்குமாறு அழைப்பு விடுத்தார்.






யாழ். மறைமாவட்ட அன்பிய ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இணையத்தளக் கருத்தரங்கின்போதே ஆயர் அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக்கருத்தரங்கில் ஆசிய ஆயர் பேரவையின் அன்பிய வளவாளர் குழுவைச் சேர்ந்த திருமதி வெண்டி லூயி சிங்கப்பூரிலிருந்தும், அருட்பணி. ரொகான் டோமினிக் அமெரிக்காவிலிருந்தும் சிறப்புப் பேச்சாளர்களாக கலந்துகொண்டு தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். இவர்களோடு அருட்பணி. ம. வி. இ. இரவிச்சந்திரன் அடிகளாரும் தனது கருத்துரையை வளங்கினார்.

இலங்கை ஆயர் பேரவையின் அன்பிய ஆணைக்குழுவின் தலைவராகிய திருகோணமலை மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி நொயெல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களால் அன்பிய ஆண்டு பிரகடனம் பற்றிய விளக்கம் அளிக்கப்பட்டது.

யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த குருக்கள், துறவியர், பொதுநிலையினர், அன்பிய ஊக்குவிப்பாளர்கள் அடங்கலாக 75 பேர் வரையில் இவ் இணையவழி கருத்தரங்கில் பங்குபற்றினார்கள். யாழ். மறைமாவட்ட அன்பிய ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்பணி. மில்பர் வாஸ் அடிகள் இக்கருத்தரங்கை ஒழுங்கு செய்து தலைமை தாங்கி சிறப்பாக நடாத்தினார்.

## புதுமை மாதாவின் 400வது யூபிலி ஆண்டு




இலங்கையில் கத்தோலிக்க விசுவாசத்தைப் பரப்பிய போர்த்துக்கேயர்களினால் யாழ்ப்பாண இராட்சியம் 1621ம் ஆண்டு பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டவுடன் அவர்களால் யாழ். கோட்டைக்குள் புதுமை மாதாவின் திருச்சுரூபம் ஸ்தாபிக்கப்பட்டது.

இந்நிகழ்வின் 400 ஆண்டு நிறைவு இவ்வருடம் நினைவு கூரப்படுகிறது. அன்று போத்துக்கேயர்களால் நிறுவப்பட்ட புதுமை அன்னையின் அசல் திருச்சுரூபம் தற்போது இந்தியாவின் கோவா என்னுமிடத்திலுள்ள ஆலயமொன்றில் வைக்கப்பட்டிருந்தாலும் புதுமை மாதாவின் வல்லமையுள்ள பிரசன்னத்தை யாழ். குருநகரிலுள்ள புதுமை மாதா ஆலயத்தில் இறைமக்கள் இன்றும் அனுபவித்து வருகிறார்கள். இதனால், புதுமை மாதாவின் வரவின் 400 ஆண்டை புதுமை மாதா ஆலய மக்களோடு இணைந்து யாழ். மறைமாவட்டம் யூபிலி ஆண்டாக நினைவு கூர்ந்து கொண்டாடுகிறது.

## கணணிக் கற்கைக் கூடம் திறந்துவைப்பு




யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் தொழிற்கல்வி நிறுவனத்தின் புனித டொன் பொஸ்கோ கல்விக் கூடத்தில் கடந்த 30-01-2021 அன்று புதிதாக அமைக்கப்பட்ட கணணிக் கற்கைக் கூடம் யாழ். மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்கலாநிதி. ப.யோ ஜெபரட்ணம் அடிகளாரால் திறந்துவைக்கப்பட்டது. புத்தம் புதிய 30 கணணிகளை உள்ளடக்கிய இக் கணணிக் கூடத்தில் பயிற்சி பெறுவதற்காக 25 மாணவர்கள் தம்மைப் பதிவு செய்துள்ளார்கள்.

புனித. டொன் பொஸ்கோ சபையைச் சேர்ந்த அருட்சகோதரர் கபிரியேல் அவர்கள் இதன் இயக்குநராகவும், அருட்பணி. ஜோர்ஜ் றொட்றிகஸ் அடிகள் அதிபராகவும் பணியாற்றுகிறார்கள்.

இங்கு கணணிப்பயிற்சி, ஆங்கிலக் கற்கை நெறி ஆகியவற்றிற்காக மாணவர்கள் விண்ணப்பிக்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஆலயத் திருநாட்கள் பற்றிய குருக்கள் மன்றத் தீர்மானங்கள்

யாழ். மறைமாவட்டத்தில் ஆலயத் திருநாட்களைக் கொண்டாடுவதுபற்றி அண்மையில் ஆயர் தலைமையில் நடைபெற்ற குருக்கள் மன்றக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

**உள்ளூர் மக்களோடு மட்டும்**

தற்கால சூழ்நிலை காரணமாக ஆலயங்கள் திருநாட்களைக் கொண்டாடும்போது அவ் ஆலயங்களின் சூழலில் வசிக்கும் மக்களோடு மட்டும் திருநாட்களைக் கொண்டாடுமாறும், வெளியிடங்களிலிருந்து மக்கள் வந்து கலந்துகொள்வதைத் தவிர்க்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**புனிதர்களின் பெயர்கொண்ட ஆலயங்கள்**

திருவருகைக்காலம், தவக்காலம், உயிர்ப்புக்காலம் ஆகியவற்றில் வரும் ஞாயிறு தினங்களிலும் மற்றும் பெருவிழாக்கள் வரும் ஞாயிறு தினங்களிலும் புனிதர்களின் பெயர் கொண்ட ஆலயங்களின் திருநாட்கள் வருமாயின் அந்த ஞாயிறு தினங்களில் அவை கொண்டாடப்படலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இதுபற்றிக் கடைப்பிடிக்கப்பட்டுவந்த ஒழுங்கு முறையில் இத்திருத்தம் செய்யப்படுவதாகக் குருக்கள் மன்றத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## தாத்தா பாட்டிகளையும், முதியோரையும் நினைவுகூரும் சிறப்பு நாள்



தாத்தா பாட்டிகளையும், முதியோரையும் சிறப்பான விதத்தில் நினைவுகூர உதவும் நோக்கத்தில், ஒவ்வோர் ஆண்டும், ஜூலை மாதம் நான்காம் ஞாயிற்றுக்கிழமையை அவர்களுக்கென அர்ப்பணிக்கும் நாளாக அறிவித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

ஒவ்வோர் ஆண்டும், ஜூலை 26ம் தேதி சிறப்பிக்கப்படும் கன்னி மரியாவின் பெற்றோர்களாகிய, அதாவது, இயேசுவின் தாத்தா பாட்டிகளான, புனிதர்கள் சுவக்கீன் மற்றும் அன்னா ஆகியோரின் திருநாளுக்கு அருகில் வரும் ஜூலை நான்காம் ஞாயிற்றுக்கிழமையில் இந்தச் சிறப்பு நாள் இடம்பெறும் என அறிவித்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இவ்வாண்டு, இந்தச் சிறப்பு நாள் ஜூலை 25ம் தேதி நிகழும் என்பதையும் சுட்டிக்காட்டினார். 11

## மாதகல் லூர்து அன்னை திருவிழா இவ்வருடம் இல்லை

நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக மாதகல் லூர்து அன்னை கெபி திருவிழா இவ்வருடம் (2021) இடம்பெறாது என அருட்பணி அன்ரனிபாலா அடிகளார் பாதுகாவலனுக்குத் தெரிவித்தார்.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## பார்த்த போது புரிந்தது

2020ம் ஆண்டிற்கு விடை கொடுத்து 2021ம் ஆண்டில் காலடி பதித்து அன்பிய ஆண்டை ஆரம்பித்து தமிழர் திருநாளில் பொங்கி மகிழ்ந்து மாதம் ஒன்று கழிந்து விட்டது. இந்தக் காலப்பகுதிக்குள் நடைபெற்ற பல சம்பவங்களை நாளிதழ்கள் ஊடாகவும், சமூக வலைத் தளங்கள் ஊடாகவும் பார்த்த போது பல விடயங்கள் பளிச்சிட்டுப் புரிந்தது.

வருடத்தொடக்கமே கொந்தளிப்புடன் ஆரம்பித்ததை யாரும் இலகுவில் மறந்து விட முடியாது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இரவோடிரவாக நிர்மூலம் செய்யப்பட்டு அழிக்கப்பட்டது. இச் சம்பவத்திற்குப் பின்னணி என்ன என்பதை ஆராய்ந்து விடை தேடுவதை விடுத்து நினைவுத்தூபி இறுதி யுத்தத்தில் உயிரிழந்த எம் மக்களின் நினைவுச் சின்னமே தவிர வேறு எதுவுமில்லை. நினைவுச் சின்னங்களையே நாம் வைத்திருக்க முடியாவிட்டால் எம் வாழ்வியல் நிஜங்களை எப்படிக் கடப்பது என்பதைச் சிந்திக்க வேண்டும்.

மற்றுமொரு புறத்தில் விபத்துக்களால் ஏற்படுகின்ற மரணங்கள் குறிப்பாக இளைஞர்கள் தம் உயிரை இழந்து நிற்கும் அவலம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டுவருகின்றது. வாகனங்களை, உந்துருளிகளை வேகமாகச் செலுத்த வேண்டும் என்ற ஆசை மிகை. ஆதலினால் உயிர்கள் பறிபோகின்றன. இவ்வாறு வாழவேண்டிய குருத்துக்கள் கருகிப் போகின்ற போது நம்மினத்தின் எதிர்காலம் எப்படி அமையப் போகின்றது என்பதை யாராவது சிந்திக்கின்றோமா? சிந்திக்க வேண்டும்.

இன்னொரு புறத்தில் தற்கொலைச் சம்பவங்கள் பொருட்களுக்கு விலை உயர்வது போல எமது மண்ணில் எகிறிக் கொண்டு செல்கின்றது. தற்கொலைகள் கோழைகளின் செயற்பாடு, வாழத் தெரியாதவன் வகுத்தவழி போன்ற விருது வாக்குகளோடு நாம் அமைத்து விடுகின்றோம். எத்தகைய பிரச்சினைகளாக இருந்தாலும் அவற்றுக்கான மாற்று வழியாக ஒரு போதும் தற்கொலைகள் அமையாது. எந்தவொரு சமயமும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. இந்நிலையில் பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பவர்கள் தத்தமது பிரச்சினைகளை முதலில் வெளிக்கொணர வேண்டும். நாம் அவர்களின் பிரச்சினைகளை செவிமடுத்து அவர்களுக்கு வழிகாட்டும் நல்ல ஆலோசகர்களாக மாறவேண்டும். இதற்கு நாம் தயாரா? அண்மைக்காலங்களில் எமது பிரதேசங்களில் தற்கொலைகள் போட்டிக்குப் போட்டியாக நடைபெறுகின்றது. நீ முதல் சாகிறியா? நான் பின்னர் சாகட்டா என்ற கோணத்தில் தற்கொலைகள் அசுர வேகத்தில் பெருகிவருவதைப் பார்க்கும்போது நாம் இறந்து வேறொரு உலகத்தில் நிம்மதியாக சஞ்சரிக்கலாம் என இவர்கள் எல்லோரும் நினைக்கிறார்களோ என ஐயுறத் தோன்றுகிறது.

வேறொரு புறத்தில் போதை என்ற வாதைக்குப் பாதை சமைத்து வருகிறது எமது பேதை சமுதாயம் இது தொடர்பாக இவ்விடத்தில் கருத்துத் தெரிவிக்க வேண்டிய அவசியம் இருக்காது. இத்தகைய செய்திகளை வருடக்கணக்காக நாம் கேட்டுவருகின்றோம், எம் இனத்தை அழிப்பதற்காக இந்த ஏவுகணை ஏவப்படுகின்றது என்பதையும் அறியாமல் நாம் அதற்குள் அமுங்கிப் போகின்றோம். இதனால் சிறுபிள்ளைகள் கூட இன்று இந்த வலைக்குள் சிக்குண்ட அபாயம் ஏற்பட்டுள்ளது. இதற்கு எந்த மாற்று வழியும் கிடையாது. "திருடனாய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது" என்பது மட்டுமே உண்மை.

இவை எல்லாம் ஒரு புறம் இருக்க தமிழர்களுக்கான தாயக மண்ணில் ஆண்டாண்டு காலம் அவர் தம் சமயச் சின்னங்கள் இருந்த இடங்களில் தற்போது திடிர் திடிர் என்று புத்த பகவான் எழுந்து நிற்கின்றார். மதங்களை மதங்கள் மதிக்க வேண்டுமே தவிர ஒரு போதும் மிதிக்கக்கூடாது. இங்கையில் எங்கு வேண்டுமானாலும் நாங்கள் பௌத்த விகாரைகளை அமைப்போம் எனப் பொறுப்பற்ற முறையில் பொறுப்பானவர்கள் உரைப்பது மிகுந்த மனவருத்தத்தை ஏற்படுத்துகின்றது. சமயங்கள் மக்களை நல்வழிப்படுத்தி இறைவனை அடைவதற்குரிய வழிகளை காட்டவேண்டுமே தவிர, மக்களின் இயல்புவாழ்வைச் சீர்குலைத்து குரோதங்களை வளர்ப்பதாக அமைந்துவிடக்கூடாது. இவையெல்லாம் நல்லிணக்கத்திற்குத் தடையானவை என்பதில் ஐயப்பாடு ஏதும் இல்லை.

புத்த பகவான் அகிம்ஷை, கருணை போன்ற பஞ்ச சீலக் கொள்கைகளைப் போதித்து தன் சமயத்தை நிறுவினாரே தவிர, துவேஷ மனப்பாங்குடன் அடாவடித் தனங்கள் புரிந்து தன் சமயத்தை நிறுவவில்லை. எனவே அவர் வழி வந்த பௌத்த சமய மக்களும் அவரின் வழியில் தமது சமயத்தை நிலை பெறச் செய்வதே தார்மீகமாகும். இத்தார்மீகக் கடமையை சகோதர மதம் இதய சுத்தியுடன் நிறைவேற்ற வேண்டும் என்பதே எமது வேண்டுகோளாகும்.

எமது மண்ணில் நடந்தேறும் அவலங்களைப் பார்க்கின்றபோது அழிவின் விளிம்பிற்கு வந்துகொண்டிருக்கிறோம் என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது. இவற்றைப் பார்ப்பவர்களுக்குப் பல விடயங்கள் புரிந்தாலும் எமக்கு ஏன் தேவையில்லாத வேலையெனப் பலர் அமைதி காப்பதும் தெரிகிறது. ஆகும் காலமெல்லாம் அவமே போக்கிவிட்டு, அழிவின் விளிம்பில் நின்று கூக்குரல் இடுவதால் எவ்வித பயனும் விளையப் போவதில்லை. சிந்தித்து செயற்படும் காலத்தில் நாமிருக்கிறோம். பிறரை சிந்திக்க வைக்கும் நேரத்திலும் இருக்கிறோம். கிறிஸ்து இயேசுவின் சீடர்களாக நாம் மாறி அன்பிய ஆண்டில் எம் அயலவர் மட்டில் பொறுப்புடன் செயலாற்றுவதையே ஆண்டவர் எதிர்பார்க்கின்றார்.

செயலற்ற விசுவாசிகளாக நற்செய்தி விழுமியங்களை வாசிப்பதில் மட்டில் மட்டும் கவனம் செலுத்தாமல் அதை எம்மனாங் களிலும் அயலவர் மனங்களிலும் ஆழமாக விதைப்போமாக இருந்தால் நற்கனி கொடுக்கும் பல மரங்கள் எமது மண்ணில் நிழல்தரும்.

# துயர் பகிர்கின்றோம்

யாழ். மறைமாவட்ட அருட்பணியாளரும் தற்போது யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் நிதி முகாமையாளராகப் பணியாற்றியும்வரும் அருட்பணி எட்வின்நாதன் அடிகளாரின் அன்புத் தந்தை **திரு பிலிப்புப்பிள்ளை எட்வேட்ராஜா** அவர்கள் கடந்த 29.01.2021 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் அருட் தந்தைக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது செபங்களுடன்கூடிய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதுடன் அவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம்.

# மறைக்கல்வி என்பது இறைவார்த்தையின் எதிரொலி



விசுவாசத்தை வழங்குவதில் இறைவார்த்தை, நமக்கு அடிப்படையான ஒன்றாக இருக்கும் வேளையில், அந்த நற்செய்தியின் மகிழ்வை நமக்குக் கொணர மறைக்கல்வி உதவுகிறது

திருஅவையின் மறைக்கல்வியும் நற்செய்தி அறிவித்தலும், மறைக்கல்வியும் வருங்காலமும், மறைக்கல்வியும் சமுதாயமும் என மூன்று தலைப்புகளில் தன் கருத்துகளைப் பகிர்ந்துகொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மறைக்கல்வி என்பது, இறைவார்த்தையின் எதிரொலி என்பதை வலியுறுத்தினார்.

விசுவாசத்தை வழங்குவதில் இறைவார்த்தை, அதாவது விவிலியம், நமக்கு அடிப்படையான ஒன்றாக இருக்கும் வேளையில், அந்த நற்செய்தியின் மகிழ்வை நமக்குக் கொணர மறைக்கல்வி உதவுகிறது என எடுத்துரைத்தார் திருத்தந்தை.

நற்செய்தி அறிவித்தலின் மையமாக இயேசுவே இருப்பதால், மறைக்கல்வி என்பது, இயேசுவை நேருக்கு நேராகச் சந்தித்து உரையாடவும், அவரோடு தனிப்பட்ட, நெருங்கிய ஓர் உறவை வளர்க்கவும், சான்றுகளாக விளங்கவும் உதவுகிறது என மறைக்கல்விக்கும் நற்செய்தி அறிவித்தலுக்கும் இடையேயுள்ள நெருங்கிய தொடர்பையும் சுட்டிக்காட்டினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மறைக்கல்வியும் வருங்காலமும் என்ற தன் இரண்டாவது கருத்துக் குறித்து எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அந்தந்தக் காலத்தின் அறிகுறிகள், மற்றும், உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்களாகச் செயற்பட வேண்டியதன் அவசியம், மற்றும், பிறரன்பு, திருவழிபாடு, குடும்பம், கலாசாரம், சமுதாய வாழ்வு, பொருளாதாரம் ஆகிய துறைகளில் புதுப்பிக்கப்பட்ட மறைக்கல்வியுடன் செயற்படுதல் போன்றவை குறித்தும் எடுத்தியம்பினார்.

நவீனகால மக்களின் கேள்விகள், தீர்க்கமுடியாத பிரச்சினைகள், உடைபடும் தன்மைகள், நிச்சயமற்ற நிலைகள் போன்றவைகள் குறித்து அச்சம் கொள்ளாமல் மறைக்கல்வியாளர்கள் செயற்படவேண்டும் என்ற அழைப்பை முன்வைத்த திருத்தந்தை, மாற்றுத்திறனாளிகளுடன் அவர்கள் ஆற்றிவரும் சேவைக்கு தன் பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

கொவிட்-19 பெருந்தொற்றுக் காரணமாகத் தனிமைப்படுத்தலும், தனிமை உணர்வுகளும் அதிகரித்து வரும் இன்றைய சூழலில், ஒரே சமுதாயமாக அனைவரையும் உணரவைக்க வேண்டிய கடமை குறித்து, மறைக்கல்வியும் சமுதாயமும் என்ற தலைப்பில் கருத்துக்களைப் பகிர்ந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பிரச்சனைகளிலிருந்து விடுபட்டு, வெளிவருவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டாலே இயலும் என்பதை, அண்மைய நெருக்கடி நமக்குக் காட்டியுள்ளது என்பதையும் சுட்டிக்காட்டினார்.

சமுதாயம் என்பது, ஒருவர் மற்றவர் மீது அக்கறை கொண்டு ஒரே குடும்பமாக ஒன்றிணைந்து செயற்படவேண்டியதன் அவசியம் குறித்தும் எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சமுதாயம் என்ற முழு உணர்வை உள்வாங்கிச் செயற்படுவதன் வழியாகவே, ஒவ்வொருவரும் தங்கள் மாண்பை முழுமையாகக் கண்டுகொள்ள முடியும் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

சமுதாயத்தில் காயப்பட்டுள்ள மக்களுக்கு நல்ல சமாரியராக இருந்து, அவர்கள் அருகில் சென்று கருணையுடன் அவர்களின் காயங்களுக்கு மருந்திட வேண்டிய தேவை குறித்தும் எடுத்துரைத்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.


# ஆளுமை மேம்பாடு மற்றும் சம ஆற்றுப்படுத்துனர்களை உருவாக்கும் பயிற்சி நெறி

(Personality Growth & Co- Counsellor's Training Programme)

வளர்பிறை உளவளத்துணை நிலையத்தியத்தில் புலமை வாய்ந்த வளவாளர்களினால் மனித ஆளுமை மேம்பாடு மற்றும் சம ஆற்றுப்படுத்துநர்களை உருவாக்கும் பயிற்சி நெறி 06.02.2021 அன்று எமது நிறுவனத்தில் ஆறாம் பிரிவினருக்கான (6th Batch) வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

***பயிற்சிக்காலம் :- 3 மாதங்கள் (100 மணித்தியாலங்கள்) பிரதி சனி, ஞாயிறு (9.00 - 1.00) பயிற்சியின் பின்னர் எமது நிறுவனத்தினால் பெறுமதியான கற்கைநெறிச் சான்றிதழ் வழங்கப்படும்.***

- கல்வித்தகைமை :- க.பொ.த சாதாரணதரச் சித்தி
- விண்ணப்ப முடிவுத் திகதி :- 05.02.2021
- தகுதியானவர்கள் நேரடியாகத் தமது பதிவுகளினை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.
- அனுமதிக் கட்டணம் :- 1000.00

வளர்பிறை உளவளத்துணை நிலையம் (ICOF)
இல 05, பிளச்சஸ் லேன்,
சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு- 0772660209- 0212228238

## காவலன் கலசம்

# யாழ் ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களின் ஐந்தாம் ஆண்டுப் பணி நிறைவுகள்

ஆயர் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நிறைவு ஒரு முக்கிய மைல்கல்லாகவும் முன்னைய வருடங்களின் நீட்சியாகவும் அமைகின்றது. ஆயரில் புதிதாகக் கண்டு கொண்ட நல்ல ஆளுமைப் பண்புகளையும் ஐந்தாம் வருட முக்கிய பணிகளையும் இங்கு நோக்குவோம்.

### ஆயரின் ஆளுமைப் பண்புகள்

1. ஆயர் அவர்கள் தம் குருக்களில் மாத்திரமன்றி அவர்களது குடும்பங்களிலும் அக்கறை காட்டி வருகின்றார். குரு மகன் வெளிநாட்டில் இருக்கும் போது குடும்ப உறுப்பினர் காலமானால், அவர் வருகை தரமுடியாததல் ஏற்படும் துன்பத்தைப் புரிந்துணர்ந்து, தானே அத்திருப்பலியை ஒப்புக்கொடுப்பது ஆயரின் நல்ல பண்பாகும். அவ்வாறே, குருக்களின் வயோதிபப் பெற்றோருக்குக் குருமகன் அருகே இருப்பது பெற்றோருக்கு உதவியாக அமையும் என்பதைக் கருத்திற்கொண்டு பணியிட மாற்றத்தின்போது செயற்பட்டு வருகின்றார்

2. பணிகளைச் சிறப்பாக மேற்கொள்ளும் குருக்களுக்கு வெகுமதி வழங்கி ஊக்குவிக்கும் நல்ல பண்பினை ஆயரில் கண்டிருக்கின்றேன். மேலும் ஆயர் அவர்கள் உண்மையான நட்பும் பாசமும் நிறைந்தவர் என்பதும் உண்மை.

3.ஆயர் அவர்கள் ஏழைகளில் அக்கறையோடு நடந்துகொள்பவர். தனக்குத் தெரிந்த ஏழைகளுக்குத் தனிப்பட்ட முறையிலும் உதவுவதில் மனமுவந்து ஈடுபட்டு வருகின்றார்.

4.வெளிநாட்டுத் திருச்சபையில் அனுபவம் பெறாத குருக்களை ஆயர் அவர்கள் அங்குள்ள பங்குகளில் பணியாற்ற அனுப்பி வைப்பது அவர்களுக்கு நல்ல புதிய அனுபவங்களைப் பெற்றுக்கொடுக்கின்றது.

5. தெற்குத் திருச்சபையோடு நல்லுறவு பேணல் ஆயரின் ஆன்மீகப் பண்புகளில் ஒன்று. தலவில் அன்னாள் ஆலயப் பெருநாளில் சிலாப ஆயர் மேதகு வலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகையோடு சேர்ந்து பலி ஒப்புக்கொடுத்தமை ஒரு உதாரணமாகும்.

6. திட்டமிட்டுச் செயற்படும் இவரது நிர்வாகப் பண்பைப் பல சந்தர்ப்பங்களில் காணக்கூடியதாக இருக்கின்றது. ஒரு முக்கிய கூட்டம் முடிந்தால் அடுத்த கூட்டத்திற்கான திகதியை உடனேயே நிச்சயம் பண்ணுவதில் கவனம் செலுத்துவார்.

**அ. ஆலயப் பணிகள்:**

ஆலயங்கள் கட்டி முடித்தல், ஆலயப் புணரமைப்பென்பன மக்களின் ஆன்மீக தாகத்தைத் தீர்ப்பதற்கான பணியாகக் கருதி இவற்றைத் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தி வருகின்றார்.

1.கூழாமுறிப்புப் பங்கின் புதிய பணித்தளமாக மன்னாக் கண்டல் பகுதி அமைகின்றது. இது மன்னாகண்டல், வசந்தபுரம் ஆகிய இரு கிராமங்களை உள்ளடக்கியது. மண்டைதீவைச் சேர்ந்த ஒரு குடும்பத்தவர் கால் ஏக்கர் காணியை ஆலயம் கட்டுவதற்கு நன்கொடையாக வழங்கினார். இதனைப் பார்வையிடச் சென்ற ஆயர் அதில் ஆலயம் கட்ட அருட்பணி நிக்சன் கொலின் அடிகளாருக்கு அனுமதி வழங்கினார். இப்போது முதன் முறையாக ஆலயம் ஒன்று இம்மக்களுக்காகக் கட்டப்படுகின்றது. இது ஆயரின் விருப்பின்படி லூர்து அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட உள்ளது. மேலும், கூழாமுறிப்புப் பங்கின் பூதன் வயல் பிரதேசத்தில் கார்மேல் அன்னை ஆலயம் கட்டி முடிக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டு வழிபாடுகள் இடம்பெறுகின்றன. பண்டாரக்குளம் அன்னை மரியாள் ஆலயமும் புனரமைக்கப்பட்டுப் புதுத்தோற்றம் பெற்றுள்ளது. அவ்வாறே இதே பங்கின் முத்தையன்கட்டு புனித சூசையப்பர் ஆலயம் நிறைவடைந்து மிகவிரைவில் ஆசீர்வதிக்கப்பட்டுத் திறந்து வைக்கப் படவுள்ளது. அத்தோடு, ஒட்டிசுட்டான் கிறிஸ்து அரசர் ஆலயக் கட்டுமானப் பணிகள் பெருமளவு முடிவுறும் நிலையிலுள்ளது. ஆயர் அவர்கள் அண்மையில் தன் பணிகள் மத்தியிலும் இவ்வாலயங்களின் மக்களைத் தரிசித்து நிதியுதவி அளித்து பங்குத்தந்தை அருள்திரு நிக்சன் கொலின் அடிகளாருக்கு ஊக்கமளித்துள்ளார்.

2. இராமநாதபுரம் புனித ஆரோக்கிய நாதர் ஆலயம் புணரமைக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டு 23.8.2020 அன்று திறந்து வைக்கப்பட்டது. அவ்வாறே இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பீடப்பகுதி புதுப்பொலிவுடன் நிர்மாணிக்கப்பட்டு ஆயரால் திறந்து வைக்கப்பட்டது. மேலும், ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலயம் புணரமைக்கப்பட்டு 16-8-2020 அன்று திறந்து வைக்கப்பட்டது. அத்தோடு சண்டிலிப்பாய் புனித குழந்தை இயேசுவின் திரேசம்மாள் ஆலயத்தில் புதிய முகப்பு கட்டித் திறக்கப்பட்டது. கோணாவில் புனித செபஸ்தியார் ஆலயமும் புணரமைக்கப்பட்டு வருகின்றது.

3.யாழ் அடைக்கல அன்னை ஆலயத்தின் பின்புறத்தில் அமைந்துள்ள அற்புத மாதா சுரூபம் புணரமைக்கப்பட்டுப் புதுப்பொலிவோடு காட்சியளிக்கின்றது. இவற்றோடு யாழ் மரியன்னை பேராலய வளவில் செபமாலைப் பூந்தோட்டம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

4. மக்கள் மீள் குடியமர்ந்துள்ளதால் ஆலயம் கட்டப்பட்டு ஒட்டகப்புலம் பங்கு உருவாக்கப்பட்டுள்ளது. இதில் வளலாய் ஆலயமும் இணைக்கப்பட்டுள்ளது.

5. அச்சுவேலி சேமக்காலைச் சிற்றாலயம் ஆயரின் ஐந்தாம் ஆண்டிலேயே ஆசீர்வதித்துத் திறந்து வைக்கப்பட்டது

**ஆ. குருமனைகள்**

1. கூழாமுறிப்பு குருமனை, அல்லைப்பிட்டியில் ஜிம் பிறவுண் அருட்பணியகம், பரந்தன் புனித அந்தோனியார் ஆலயப் பங்குமனை, ஆனைக்கோட்டைப் பங்குமனை அக்கராயன் பங்கில் பங்குமனை என்பன ஆயரின் அறிவுறுத்தலோடு கட்டிமுடிக்கப்பட்டு ஆயரால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே நெடுந்தீவுப் பங்குமனை புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

2. பரந்தன் புனித அந்தோனியார் ஆலய நுழைவாயிலில் புனித அந்தோனியார் திருச்சுரூபமும் புணரமைக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டது.

**இ. புதிய கட்டடங்கள்**

1. ஓய்வுநிலை ஆயர்கள் குருக்களுக்கான புதிய கட்டடத் தொகுதி தை மாதம் 2020 இல் கட்டிமுடிக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது.

2. கொழும்புத்துறை புனித வளனார் மூதாளரின் இல்லத்தில் புதிய கட்டடத் தொகுதி அழகுற அமைத்து முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.



3. குருக்கள் ஒன்று கூடுவதற்கும், ஓய்வெடுப்பதற்கும் வசதியாக நுங்குவில் தோட்டத்தில் ஒரு புதிய ஓய்வில்லம் கட்டப்படுகின்றது.

4. புதுக்குடியிருப்புப் பங்கில் சமூக முன்னேற்ற நிலையம் கட்டி முடிக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டது.

5.பண்டத்தரிப்பு புனித பற்றிமா அன்னை ஆலய எழுபைத்தைந்தாவது ஆண்டு யூபிலிக் கட்டடம் 13-10-2020 ஆயரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

6. உருத்திரபுரம் ஆரோபண இளைஞர் இல்ல வளாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத் தொகுதியை 14-7-2020 அன்று ஆயர் அவர்கள் திறந்துவைத்தார். அத்தோடு வயல் பரப்பில் புனித செபஸ்தியார் திருச்சுரூபம் கட்டப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டது.

அருட்தந்தை இராசேந்திரம் ஸ்ரலின்

**ஈ. ஏனைய நிர்மாணப் பணிகள்**

1. நற்கருணை ஆண்டவர்மீதுள்ள பக்தியை ஆழப்படுத்தும் நோக்கோடு யாழ் மரியன்னை பேராலயத்தில் நற்கருணைச் சிற்றாலம் அழகியலுணர்வோடு புதுப்பிக்கப்பட்டு ஆழமாகச் செபிப்பதற்குத் தூண்டுதலாக உள்ளது.

2. நூற்று ஐம்பது வருடம் பழமைவாய்ந்த புனித மடுத்தீனார் சிறிய குருமடச் சிற்றாலயம் புணரமைக்கப்பட்டு ஆயரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

3. யாழ் மறைமாவட்டத்தின் முதல் ஆயர் பெற்றக்கனி ஆண்டகை அவர்களின் பங்களிப்பை நினைவுகூரும் முகமாக அவருடைய சிலை ஒன்று ஆயர் இல்ல வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

**உ. தமிழ் மக்கள் நலன்:**

தமிழ் மக்கள் மேம்பாட்டு அபிவிருத்தி மன்றம் எனும் அமைப்பானது சமூகத்தலைவர்கள், சமயத்தலைவர்கள், கல்விமான்கள் போன்றோரை ஒன்று கூட்டி தை மாதம் 2020 இல் அமைக்கப்பட்டது.

**ஊ. வழிபாட்டு நெறிப்படுத்தல்:**

கொரோனா கொள்ளைநோயின்போது குருக்களுக்குப் புத்திசாலித்தனமான அறிவித்தல்களை உரிய நேரத்தில் வழங்கியமை போற்றப்பட வேண்டிய ஒன்றாகும். ஏனெனில் மக்களிடையே இந்நோய் மேலும் பரவாது தடுக்க வழிசமைத்தது. அத்தோடு ஆயர் இல்லத்தில் நிறைவேற்றப்படும் ஞாயிறு திருப்பலியானது ஒளிபரப்பப்பட்டு மக்களின் ஆன்மீக தாகம் தணிக்கும் பணியையும் மேற்கொண்டார்.

**எ. குருக்களின் ஆன்மீகம்:**

கொரோனா காரணமாகக் குருக்களுக்கான வருடாந்தத் தியானத்தைப் பண்டத்தரிப்புத் தியான இல்லத்தில் நடாத்த முடியாதபோதும் ஆயர் அவர்களின் புத்திசாதுரியத்தால் இணையவழியில் இது நடாத்தப்பட்டது. இது பயனுடையதாக இருந்ததாக குருக்கள் கருத்துத் தெரிவித்தனர். நமது மறைமாவட்டத்தில் ஆயரின் இம்முயற்சி புதிதான ஒன்றாகக் கொள்ளப்பட வேண்டும்.

**ஏ. கத்தோலிக்க பாடசாலைகளுக்குக் கத்தோலிக்க அதிபர்:**

கத்தோலிக்க பாடசாலைகளில் கத்தோலிக்க அதிபரை நியமிப்பது கத்தோலிக்க மாணவர்களின் ஆன்மீக மற்றும் ஒழுக்க உருவாக்கத்திற்கு அவசியம் என்பதை உணர்ந்த ஆயர் இதனை நடைமுறைப்படுத்துவதிலும் மும்முரமாக ஈடுபட்டுள்ளார்.

**ஐ. வன்னி மறைமாவட்டத்திற்கான ஆயத்த வேலை:**

எதிர்காலப் புதிய மறைமாவட்டத்தைக் கருதிற்கொண்டு கிளிநொச்சியில் காணி வாங்கி ஆயர் இல்லம் ஒன்றைக் கட்டி எழுப்புவதற்கு ஆயர் அவர்கள் திட்டமிட்டுச் செயற்படவுள்ளமை அவரின் தூர நோக்கிற்குச் சான்றாக அமைகின்றது.

**நிறைவுரை:**

எமது ஆயரைப் பற்றி நினைக்கும் போது, இறைவன் நமது காலத்திற்குப் பொருத்தமான ஒரு ஆயரையே நமக்குத் தந்துள்ளார் என்ற நன்றி உணர்வே என்னில் மேலோங்கி நிற்பதுண்டு. அவரது பணி மென்மேலும் சிறக்க இறைஅருளும் அனைவரது ஒத்துழைப்பும் நிறைவாகக் கிடைப்பதாக.

# புனித யோசேப்பு ஆண்டில் சிறப்பான நிறைபேறு பலன்கள்

தற்போது திருஅவையில் சிறப்பிக்கப்பட்டுவரும் புனித யோசேப்பு ஆண்டை முன்னிட்டு, இவ்வாண்டு வழங்கப்படும் சிறப்பு நிறைபேறு பலன்கள் குறித்து அறிக்கை ஒன்றை திருஅவையின் மனசாட்சி திருப்பீடத்துறை வெளியிட்டுள்ளது.

புனித யோசேப்பு ஆண்டின் ஆன்மீக நடவடிக்கைகளில் பங்குபெறும் அனைவரும், ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறுதல், திருப்பலிகளில் பங்குபெறுவதல், திருத்தந்தையின் கருத்துக்களுக்காக செபித்தல், இவ்வாண்டிற்கென குறிக்கப்பட்டுள்ள சில வழிகாட்டுதல்களை பின்பற்றுதல் ஆகியவற்றின் வழியாக, இந்த நிறை பேறு பலன்களை பெறமுடியும் என உரைக்கும் இத்திருப்பீடத்துறை, இதனை சிறப்பான விதத்தில் பெறக்கூடியவர் யார் என்ற வழிகாட்டுதலையும் தந்ததுள்ளது.

இயேசு கற்பித்த 'வானிலுள்ள எம் தந்தாய்' என்ற செபத்தை குறைந்தபட்சம் 30 நிமிடங்கள் தியானிப்போர், யோசேப்பு குறித்த ஒரு நாள் தியானத்தில் கலந்துகொள்வோர், புனித யோசேப்பின் வழிகாட்டுதலை பின்பற்றி இரக்க செயல்களில் ஈடுபடுவோர், செபமாலை செபிக்கும் குடும்பங்கள், செபமாலை செபிக்கும் மண ஒப்பந்தமாகியிருப்போர், வேலை தேடி அலைவோருக்காக செபிப்போர், துன்புறும் திருஅவைகளுக்காகவும், விசுவாசத்திற்காக துன்புறும் கிறிஸ்தவர்களுக்காகவும் செபிப்போர், நிறைபேறு பலன்களை பெறமுடியும் என்கிறது திருஅவையின் மனசாட்சி திருப்பீடத்துறை.


# காவலன் கலசம்

நற்செய்தியின் உருமாற்றும் ஒளியில், நமது இளமைக் காலங்களை வாழ வேண்டும் என்பதன் பொருள் என்ன? இளமை என்பது தற்பெருமையின் மூலம் என்பதைவிட, இறைவனின் ஒரு கொடை என்ற காரணத்தால், நாம் இந்தக் கேள்வியை எழுப்ப வேண்டிய தேவை இருக்கிறது. "இளமையாக இருப்பதென்பது ஓர் அருள், அது ஓர் ஆசி". இந்தக் கொடையை நாம் அர்த்தமற்ற விதத்தில் ஊதாரித்தனமாக வீண்செலவும் செய்யலாம் அல்லது அதனை நன்றிப்பெருக்கோடு பெற்று முழுமையாக வாழ்ந்தும் காட்டலாம்.

இளமையைத் தருகிறவர் இறைவனே. அவரே ஒவ்வோர் இளைஞரின் வாழ்விலும் செயலாற்றிக் கொண்டிருக்கிறார். இளமை என்பது இளைஞர்களுக்கு ஆசி நிறைந்த காலமாகவும் திருஅவைக்கும் இந்த உலகத்திற்கும் ஓர் அருளாகவும் இருக்கிறது. மகிழ்ச்சி, நம்பிக்கையின் பாடல் மற்றும் ஓர் ஆசியாக உள்ளது. நமது முதுமைப் பருவத்திற்கு ஒரு சுருக்கமான முகவுரையாக மட்டுமே வெறுமனே பார்க்காமல் தனக்குத்தானே மதிப்புநிறைந்த வாழ்வின் பருவமாக இந்த இளமை நிறைந்த ஆண்டுகளை உருவாக்க வேண்டும்.

# இளைஞர்களுடைய பாதைகள்

**- திருத்தந்தை பிரான்சிஸ்**



**துணிவு மிக்க மறைத்தூதர்கள்**

கிறிஸ்துவின் அன்பால் நிரப்பப்பட்டவர்களாக, இளைஞர்கள், தங்கள் வாழ்க்கையை வாழும் விதத்தில், எங்கெல்லாம் தங்களைக் காண்கிறார்களோ அங்கெல்லாம் நற்செய்திக்குச் சான்றுபகர்பவர்களாக இருக்க அழைக்கப்படுகிறார்கள். ஒருமுறை புனித ஆல்பர்ட்டோ ஹுர்டாடொ (St.Alberto Hurtado) சொன்னார்: "ஒரு திருத்தூதராக இருப்பது என்பது சட்டையின் வெளிப்புறத்தில் அலங்காரத்திற்காகவும் அடையாளத்திற்காகவும் பட்டயமுள்ளை (lapel pin) அணிவது என்று பொருள்தராது. திருத்தூதராக இருப்பதென்பது உண்மையைப் பற்றிப் பேசுவதல்ல மாறாக அதை வாழ்ந்து காட்டுவது. அதற்கு உருக்கொடுப்பது, கிறிஸ்துவில் உருமாற்றப்படுவது ஆகும். ஒரு திருத்தூதராக இருப்பதென்பது கையில் கைவிளக்கை ஏந்திச் செல்வதன்று ஒளியைக் கொண்டிருப்பதும் அன்று. மாறாக, ஒளியாகவே இருப்பது.... நற்செய்தி ஒரு பாடம் என்பதைவிட அது ஒரு நல் உதாரணம், முழுமையாக வாழ்ந்துகாட்டினால் அது வாழ்வாகி ஒரு செய்தியாகிறது".

சாட்சியத்தின் இன்றியமையாமை என்றால் இறைவார்த்தையைக் குறித்து நாம் மௌனமாக, அமைதியாக இருக்க வேண்டும் என்று பொருளில்லை . நாம் ஏன் இயேசுவைப் பற்றிப் பேசக் கூடாது. அவர் வாழ்வில் வலிமை தருகிறார், அவருடன் நாம் பேசும்போதும் மகிழ்கிறோம், அவர்தம் வார்த்தைகளைத் தியானிப்பதிலிருந்து பலன் அடைகிறோம்... என்று மற்றவர்களுக்கு ஏன் சொல்லக் கூடாது? இளைஞர்களே, தவறான மற்றும் மேம்போக்கானவற்றில் இந்த உலகம் உங்களைக் கவர்ந்திழுக்கும்படி செய்துவிடாதீர்கள். அந்த அலைக்கு எதிராக நீங்கள் நீந்தக் கற்றுக் கொள்ளுங்கள். இயேசுவையும் அவர் உங்களுக்குத் தந்த இறைநம்பிக்கையையும் எப்படிப் பகிர்ந்து கொள்வதென்று கற்றுக்கொள்ளுங்கள். "நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக் கேடு" என்று புனித பவுலடியாரைச் சொல்லத் தூண்டிய மறுக்க இயலாத அதே உணர்வால் நீங்களும் தூண்டப்படுவீர்களாக (1கொரி 9:16).

"எங்கே இயேசு நம்மை அனுப்புகிறார்? அவர் நம்மை எல்லா இடத்திற்கும் அனுப்புகிறார். அங்கே எல்லைகள் இல்லை: வரையறைகள் இல்லை. நற்செய்தி என்பது ஒவ்வொருவருக்கும் உரியதுதான். அது சிலருக்கு மட்டுமன்று. நமக்கு மிக அருகே இருப்பவர்களுக்கும், அதனை மிகுதியாக ஏற்றுக் கொள்கிறவர்களுக்கும் மிகுதியாக வரவேற்கின்றவர்களுக்கும் மட்டும் உரியதன்று. அது ஒவ்வொருவருக்குமானது. சென்று வாழ்வின் ஒவ்வொரு பகுதிக்கும் சமுதாயத்தின் விளிம்புகளுக்கும் வெகு தொலைவில் இருப்பவர்களுக்கும் மிகவும் கண்டுகொள்ளாமல் அலட்சியம் செய்பவர்களுக்கும் கிறிஸ்துவைக் கொணர அஞ்சாதீர்கள். ஆண்டவர் அனைவரையும் தேடுகிறார். அவரது கனிவு மற்றும் அன்பின் கதகதப்பை ஒவ்வொரு வரும் உணரவேண்டும் என்று அவர் விரும்புகிறார்" - நாம் எங்கு இருக்கின்றோமோ எந்த நிறுவனத்தில் - நம் அக்கம் பக்கத்தில், பள்ளியில், விளையாட்டில், சமூகவாழ்வில், தன்னார்வத் தொண்டில், வேலைசெய்கிற இடத்தில் என்று எங்கெல்லாம் நம்முடைய தோழமையைக் காண்கிறோமோ அங்கெல்லாம் அஞ்சாநெஞ்சம்கொண்ட மறைத்தூதர்களாக இருக்க அவர் நம்மை அழைக்கிறார். நாம் எங்கிருந்தாலும் நற்செய்தியின் மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ள நல்வாய்ப்பை நாம் பெற்றிருக்கிறோம். இப்படித்தான் ஆண்டவர் ஒவ்வொருவரையும் சந்திக்கச் செல்கிறார். அன்பார்ந்த இளைஞர்களே, அவர் உங்களை அன்பு செய்கிறார். நீங்கள்தான் கருவிகள். அவற்றின் மூலம் அவர்தம் ஒளியையும் நம்பிக்கையையும் அவரால் பரப்ப இயலும். அவர் உங்கள் துணிவையும் உங்கள் அஞ்சாமையையும் பேரார்வத்தையும் சார்ந்திருக்கின்றார். (தொடர்ச்சி 8ம் பக்.)




**(சென்றவாரத் தொடர்ச்சி...)**

**இடம் பெற்று வரும் சீர்திருத்தங்கள்**

அஞ்ஞானிகளை மனம் திரும்பித் திருமறையில் இணைப்பதற்கென விசேடமாகச் சில மறைப்பணியாளர்களை ஒதுக்கி வைக்கவேண்டுமெனப்பலவருடங்களாக நான் எண்ணி வந்துள்ளேன். ஆயினும் கிறீஸ்தவர்களிடையே இன்னும் புரையோடிப்போயிருக்கும் பல தீய நடைமுறைகளையும், அவர்களது பல ஆன்மீகத் தேவைகளையும் பார்க்கும் போது இந்த விடயத்தில் கரிசனை செலுத்துவதற்கே முதலிடம் கொடுக்க வேண்டும் என எனக்குப்படுகிறது.

பல கிறிஸ்தவர்கள் இன்னமும் படிப்பறிவில்லாதவர்களாகவும், பிடிவாதப் போக்குள்ளவர்களாகவும் இருக்கும் போது இவர்களை வழிக்குக் கொண்டுவருவதிலும் பார்க்கச் சிலவேளை அஞ்ஞானிகளை மதம் மாற்றுவது சுலபமாகத் தென்படலாம். அஞ்ஞானிகளை மத மாற்றும் பணியில் நான் ஈடுபடும் போது உண்மையான முட்டுக்கட்டையொன்றை நான் எதிர்கொள்கின்றேன்.

அவர்களுள் சிலர் எங்களுக்கும் கிறிஸ்தவர்களுக்குமிடையில் என்ன வித்தியாசம் உள்ளது? எங்களைப் போல அவர்களும் பொய் சொல்கிறார்கள், பொய்ச் சத்தியம் செய்கிறார்கள், சண்டையிடுகிறார்கள் மற்றும் இது போன்ற பல தீய செயல்களில் ஈடுபடுகின்றனர். கிறிஸ்தவர்கள் உண்மையான, புனிதமான மதத்தைப் பின்பற்றுபவர்களாயிருந்தால் அவர்கள் அதனைத் தமது செயல்களால்

**அருட்பணி S.V.B. மங்களராஜா**

காண்பிக்கட்டும் என்று கூறுகின்றனர்.

ஆயினும் இறைவன் அறுவடைக்கு இன்னும் பல வேலையாட்களை அனுப்புவாராயின், கத்தோலிக்கரும் இருளின் செயல்களை விட்டொழிப்பார்களாயின் எமது குறிக்கோளாகிய இன்னும் பல அஞ்ஞானிகளைக் கத்தோலிக்க திருமறைக்குக் கொணர முடியும்.

(தொடரும்...)

# திருக்கலைகள்

**திரு உறைவிட அமைப்பையும் அதன் அனைத்துப் பொருட்களின் அமைப்பையும் நான் உங்களுக்குச் சொல்லிக் காட்டுகிறபடியெல்லாம் செய்யுங்கள் *(விப 25:9)***

**திருவழிபாட்டுக்கான கட்டடங்கள், பொருள்கள் எவ்வாறு திகழ 'வேண்டும்?**

- அவை தகுதியும் அழகும் கொண்டவையாகவும்
- இறைப்பற்றைத் தூண்டி வளர்ப்பவையாகவும்
- மறைநிகழ்வுகளின் புனிதத்தை வெளிப்படையாகக் காட்டுவதாகவும் விண்ணுலகைச் சார்ந்தவற்றைக் குறிக்கும் அடையாளங்களாகவும் திகழ வேண்டும்.

**திருஉருவங்கள் எவ்வாறு இடம் பெற வேண்டும்?**

- இறை மக்களை நம்பிக்கையின் மறை நிகழ்வுகளுக்கு இட்டுச் செல்லும் வண்ணம் இவை அமைக்கப்பட வேண்டும்.
- இவை நம்பிக்கையாளரின் கவனத்தை சிதறச் செய்யா வண்ணம் ஒழுங்காக அமைக்கப்பட வேண்டும். இவை இறைப்பற்றை வளர்க்கக் கூடியதாகத் திகழச் செய்ய வேண்டும்.
- ஒரு புனிதரின் உருவம் ஒன்றுக்கு மேல் இருக்கக்கூடாது.



**நம் கத்தோலிக்க வழிபாட்டில் , ஏன் திரு உருவங்கள் பயன் CASE படுத்தப்படுகின்றன?**

சிலையைக் கடவுளாக வழிபடுவதும் சிலையே கடவுள் என்று வழிபடுவதும்தான் விவிலியத்தில் கண்டிக்கப்பட்டுள்ளது. எனவே கடவுளை, கிறிஸ்துவை, ஏன் புனிதர்களைக் குறித்துக் காட்டும் அல்லது எடுத்துக் கூறும் பிரதி உருவங்களைக் கொண்ட வழிபாடு சிலை வழிபாடு அல்ல என்பது தெளிவு.

திருஉருவங்களைப் பயன்படுத்துவதைப் பற்றி இரண்டாம் வத்திக்கான் சங்கம் பின் வருமாறு எடுத்தியம்புகிறது: "நம்பிக்கைக் கொண்டோரின் வணக்கத்திற்காகக் கோவில்களில் திரு உருவங்களை வைக்கும் வழக்கம் நிலைத்து நிற்கட்டும். எனினும் கிறிஸ்தவ மக்களிடையே வியப்பைத் தூண்டி எழுப்பாமலும் ... குறைவான பக்தியில் அவர்கள் ஈடுபடாமலும் இருக்குமாறு இத்திரு உருவங்களின் எண்ணிக்கையைக் குறைப்பதோடு, அவற்றை வைப்பதில் பொருத்தமான ஒழுங்கையும் பின்பற்ற வேண்டும்" (திவ 125).

அச்சு, வரைபடம் போன்றவை தோன்றுவதற்கு முன்பாக, உருவங்கள், சிற்பங்கள்தான் கல்வி பயிலாதவர்களுக்கு நம்பிக்கையைக் கற்றுக் கொடுக்க உறுதுணையாயிருந்தன. சொல்லப்போனால் இவை வழியாகத்தான் கிறிஸ்தவ மறையின் கல்வி போதிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு திருஉருவங்களைப் பயன்படுத்துவது இருவித நோக்கங்களை முன்னிறுத்துகின்றது

பிரதி நிதித்துவமாக இருக்கின்ற திரு உருவங்கள் அங்கு குறிப்பிட்ட புனிதரைப் பற்றி எடுத்துச் சொல்கின்றன.

நாம் செலுத்தும் மரியா தையோ வணக்கமோ அந்த திரு உருவத்திற்கு அல்ல மாறாக அந்தத் திரு உருவம் குறித்துக் காட்டும் புனிதருக்கே உரியது.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## காவலன் கலசம்

# அன்பும் கட்டளைகளும்

சுதந்திர தினத்துக்கு முந்தின நாள் ஓர் இளம் பெண்ணிடம் "நாளை சுதந்திர தினம். திருப் பலியில் என்ன மறையுரை ஆற்றுவது?" என்று நான் கேட்டதற்கு அவர் "சுதந்திர தினம் அன்றாவது மறையுரையாற்றாமல் மக்களைச் சுதந்திரமாக விட்டு விடுங்கள்" என்றார்.

இன்றைய மனிதர் சுதந்திரப் பறவைகளாகப் பறக்க விரும்புகின்றனர். 'சிட்டுக்குருவிக்கு என்ன கட்டுப்பாடு?' என்ற மனநிலைதான் இன்று மக்கள் மனதில் கோலோச்சுகிறது. இத்தகைய மனிதரிடம் 'இதைச் செய்', 'அதைச் செய்யாதே' என்று வர்ணிக்கும் கடவுளுடைய கட்டளைகள் அவர்களுக்குப் பளுவான பாரமாகத் தோன்றுகிறது.

இந்நிலையில் எது உண்மையான சுதந்திரம்? என்ற கேள்வி எழுகிறது. உண்மையான சுதந்திரம் என்பது எவ்விதக் கட்டுப்பாடும் இல்லாத வாழ்வாகாது. அறிவின் பயன்பாடு என்ன? மனத்தை அது செல்லு மிடமெல்லாம் அலைய விடாது. தீமையிலிருந்து விலக்கி, நல்ல வற்றின்மீது செலுத்துவதுதான் அறிவு என்று அறிவுக்கு இலக்கணம் வகுத்துள்ளார் வள்ளுவர்.

**சென்ற இடத்தால் செலவிடாது தீது ஒரீஇ**
**நன்றின்பால் உய்ப்பது அறிவு** *(குறள் 422)*

மனித வரலாற்றின் தொடக்கத்திலிருந்தே மனிதன் தன் சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தியுள்ளான். முதல் பெற்றோர் தங்கள் சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்திக் கடவுளுடைய கட்டளைகளை மீறினார்கள். அவர்களுடைய வழி-மரபினராகிய நாமும் நமது சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தி நமக்கும் பிறருக்கும் தீங்கு விளைவித்துக் கொண்டிருக்கிறோம். : - பேருந்தில் நாம் ஏறினால் நாம் பிரயாணி, பேருந்து நம்மேல் ஏறினால் நாம் பிரியாணி, அவ்வாறே ஆசையை நாம் அடக்கினால் நாம் மக்கள். ஆசை நம்மை அடக்கினால் நாம் மாக்கள் (விலங்குகள்), விலங்குகளை அடக்கி ஆளக் கற்றுக் கொண்ட மனிதன் தன்னையே அடக்கி ஆளக் கற்றுக் கொள்ளாதது ஏன்?

### அன்பும் கட்டளைகளும்

'உங்களுடைய முக்கியமான பிரச்சனை என்ன?" என்று வகுப்பு ஆசிரியர் மாணவர்களைக் கேட்டதற்கு அவர்கள் "எங்களுடைய பெற்றோர்கள்தான் எங்களுடைய பிரச்சனை" என்றார்கள். பொதுவாகப் பிள்ளைகள் பெற்றோர்களை விரும்புவதில்லை. ஒரு சிலர் வெறுக்கின்றனர். ஏனெனில் பெற்றோர்கள் பிள்ளைகளைக் கண்டிப்புடன் வளர்க்கின்றனர். 'ஒழுங்காகப் படி', 'ஊரைச் சுற்றாதே', 'டி.வி. பார்க் காதே' என்று பெற்றோர்கள் சொல்லும்போது அது பிள்ளைகளுக்குச் சுத்தமாகப் பிடிப்பதில்லை. 'தண்ணியடிச்சா திட்றாங்க, சைட் அடிச்சா திட்றாங்க, திட்றாங்க, திட்றாங்க.... எதுக்குத் திட்றாங்க?' என்று கேள்வி கேட்கின்றனர்.

பிள்ளைகளை அன்பு செய்வதனால்தான் பெற்றோர்கள் அவர்களைக் கண்டிக்கின்றனர். பெற்றோர்கள் பிள்ளைகளை அன்பு செய்தால், அவர்களைக் கண்டிக்காமல் அவர்கள் விருப்பப்படி விட்டுவிட வேண்டுமென்று பிள்ளைகள் நினைக்கின்றனர். இவ்வாறு நினைப்பது உண்மையான அன்பின் தன்மையை உணராததன் விளைவாகும். "தந்தை தண்டித்துத் திருத்தாத பிள்ளை உண்டோ ?" (எபி 12:7).

அன்பும், கட்டளைகளும் ஒன்றுக்கொன்று முரணானவை அன்று. அன்பிலிருந்துதான் கட்டளை கள் பிறக்கின்றன. கட்டளைகளைக் கடைப்பிடிப்பதன் வாயிலாகவே அன்பு எண்பிக்கப்படுகிறது. இதைக் கிறிஸ்து தெளிவாக நமக்கு உணர்த்தியுள்ளார். "நான் என் தந்தையின் கட்டளைகளைக் கடைப்பிடித்து அவரது அன்பில் நிலைத்திருப்பதுபோல் நீங்களும் என் கட்டளைகளைக் கடைப்பிடித்தால் என் அன்பில் நிலைத்திருப்பீர்கள்" (யோவா 15:10).

கிறிஸ்து தமது தந்தையின் கட்டளைகளைக் கடைப்பிடித்து, தந்தை யின் விருப்பத்தை நிறைவேற்றி, தந்தையின் மேல் தமக்கிருந்த அன்பை எண்பித்தார். கடவுளுடைய கட்டளைகளைக் கிறிஸ்து கடைப்பிடித்ததால் அவருடைய சுதந்திரமோ, ஆளு மையோ சிதையவில்லை. மாறாக, அவர் முதிர்ச்சி பெற்ற முழுமையான மனிதராகத் திகழ்ந்தார். அவ் வாறே நாமும் கடவுளு டைய கட்டளைகளைக் கடைப் பிடிக்கும் போதுதான் நம் வாழ்வும் முழுமையடைகிறது.

### ஒழுங்கில்லாத வாழ்வு ஒழுக்கமில்லாத வாழ்வு

மனித வாழ்வில் நிகழும் ஒவ்வொன்றுக்கும் ஒரு சில ஒழுங்கு முறைகள் தேவைப்படுகின்றன. விளையாட்டுகளுக்குக் கூட விதிமுறைகள் தேவைப்படும்போது வாழ்க்கைக்கு விதிமுறைகள் தேவையில்லை என்று எவ்வாறு கூற முடியும்? ஒழுங்கில்லாத வாழ்வு ஒழுக்கமில்லாத வாழ்வாகும். போக்குவரத்துக்கும் விதிமுறைகள் உள்ளன. சாலை விதி முறைகளை மீறும்போது விபத்துக்கள் நிகழ்கின்றன. அறநெறி வாழ்வுக்கு விதிமுறைகள் தேவை. அவைதான் பத்துக் கட்டளைகள். பத்துக் கட்டளைகள் மீறப்படும்போது அறநெறி வாழ்வில் விபத்துக்கள் நிகழ்கின்றன.



ஒரு வயதான பாட்டி நான்கு சாலைகள் சந்தித்த இடத்தைக் கண்களை மூடிக்கொண்டு கடக்க முயன்றார். காவலர் ஊதிய விசிலையும் அவர் பொருட்படுத்தாமல் நடந்தார். காவலர் அவரிடம் விரைந்து சென்று அவரை நிறுத்தி, "என்ன பாட்டி, நான் விசில் அடிக்கிறேன், நீங்க திரும்பிப் பார்க்காமல் போறீங்க?" என்று கேட்டார். பாட்டியோ சிரித்துக் கொண்டு "விசில் அடித்தால் திரும்பிப் பார்க்கிற வயசா இது?" என்று கேட்டார். மனிதருடைய அறநெறி வாழ்வில் ஆபத்தின்றி நடப்பதற்காகக் கடவுள் பத்துக் கட்டளைகள் என்ற விசிலை ஊதிக்கொண்டே இருக்கிறார். ஆனால், மனிதரோ அதைக் கேட் காமல் மனம்போன போக்கில் சென்று விபத்தில் சிக்கித் தவிக்கின்றனர். 'பத்துக் கட்டளைகளைக் கடைப்பிடிக்கின்ற காலமா இது?' என்று கேட்கின்றனர். கடவுள் ஒரு சில செயல்களைத் தடைசெய்துள்ளார் என்ற காரணத்திற்காக அவை தவறானவையாக மாறுவதில்லை. மாறாக, ஒருசில செயல்கள் தம் இயல்பிலேயே தவறானவை என்ற காரணத்திற்காகக் கடவுள் அவற்றைத் தடை செய்துள்ளார். கொலையா-னது தன்னியல்பிலேயே தவறானது என்பதற்காகக் கடவுள் அதைத் தடை செய்துள்ளார். கடவுள் தடை செய்துள்ளதால் மட்டுமே கொலை தவறான செயலாக மாறுவதில்லை. பத்துக் கட்டளைகளில் கடவுள் தடை செய்துள்ள அனைத்துமே தம்மியல்பிலேயே தவறா-னவை என்பதை உணர வேண்டும்.

### விதிகளும் விலக்குகளும்

நாம் நல்லவற்றைச் செய்து, தீயவற்றை விலக்க வேண்டும். 'நல்லவை நாடு, அல்லவை அகற்று' என்பதுதான் அடிப்படையான அறநெறிக் கோட்பாடு. விதிகளையும், விலக்குகளையும் கொண்டது தான் பத்துக் கட்டளைகள். ஒருசில கட்டளைகள் நாம் என்ன செய்ய வேண்டும் என்று விதிக்கின்றன. இவை நேர்மறைக் கட்டளைகள். ஒருசில கட்டளைகள் நாம் என்ன செய்யக்கூடாது என்று விலக்கு கின்றன. இவை எதிர்மறைக் கட்டளைகள். 'தாய் தந்தையரைப் போற்று', 'ஓய்வுநாளைப் புனிதமாகக் கடைப்பிடி' எனக் கோரும் கட்டளைகள் நேர்மறைக் கட்டளைகள். 'களவு செய்யாதே', 'கொலை செய்யாதே' எனக் கோரும் கட்டளைகள் எதிர்மறைக் கட்டளைகளாகும். நேர்மறைக் கட்டளைகளை மீறி, செய்ய வேண்டிய வற்றைச் செய்யாது விட்டாலும் பாவமாகும். எதிர்மறைக் கட்டளைகளை மீறி, செய்யத்தகாதவற்றைச் செய்தாலும் பாவமாகும். இதை வள்ளுவர் பின்வரும் குறளில் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

**செய்தக்க அல்ல செயக்கெடும்**
**செய்தக்க**
**செய்யாமை யானும் கெடும்**
(குறள் 466).

### சுகமான சுமைகள்

'இதைச் செய்', 'அதைச் செய்யாதே' என நமக்குக் கொடுக்கப்படும் விதிகளும், விலக்குகளும் பெரும்பாலும் சுமையாகத் தோன்றுகின்றன. ஆனால், சுமைகள் கூட சுகமான சுமைகளாக மாற முடியும். எப்போது?

ஐந்து வயதுச் சிறுவன், மூன்று வயதுச் சிறு-வனைச் சிரமப்பட்டுத் தூக்கி வருவதைக் கண்ட நான் "ஏண்டா இந்தக் குண்டனைச் சுமக்கிறாய்?" என்று கேட்டதற்கு, அவன் "இவன் குண்டன் அல்ல, என் தம்பி" என்றான். குண்டனாகப் பார்த்தால் அவன் ஒரு சுமை. எனவே, அன்பு சுமையையும் சுகமான சுமை யாக மாற்றுகிறது. "எங்கு அன்பு உண்டோ அங்கு சுமையில்லை. அப்படியே சுமையிருந்தாலும் அது சுகமான சுமையாகி விடும்" (புனித அகுஸ்தினார்).

"என் சுமை எளிது" (மத் 11:30) என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார். "கடவுளுடைய கட்டளைகள் நமக்குச் சுமையில்லை " (1யோவா 5:3) என்று யோவான் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். அன்பே உருவான கடவுள் அன்பினால் நமக்குக் கொடுத்துள்ள கட்டளைகளை அன்புடன் ஏற்றுக் கடைப்பிடித்தால் அக்கட்டளைகள் சுமையாய் இருக்காது. .

# பரிவன்பின் மறைப்பணிக்கு திருத்தந்தை அழைப்பு

"நாங்கள் கண்டதையும், கேட்டதையும் எடுத்துரைக்காம லிருக்க எங்களால் முடியாது" (தி.பணி.4:20) என்ற கூற்றை மையப்படுத்தி திருத்தந்தை 95வது உலக மறைபரப்பு நாள் செய்தியை வெளியிட்டுள்ளார்.

தங்கள் அழைப்பை உண்மையான அன்புக் கதை யாக அனுபவிக்கும் திறமை படைத்த இதயங்கள் இயேசுவுக்குத் தேவைப்படுகின்றன என்றும், அத்தகைய இதயங்கள் உலகின் கடையெல்லைவரை சென்று தூதுரைப்பவர்களாகவும், பரிவன்பின் தூதர்களாகவும் செயற்படுமாறு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

இவ்வாண்டு, ஒக்டோபர் 3வது ஞாயிறன்று சிறப்பிக்கப்படும் 95வது உலக மறைபரப்பு நாளுக்கென்று ஜனவரி 29ம் திகதி செய்தியொன்றை வெளியிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மறைப்பணிக்கு விடுக் கப்படும் அழைப்பு, கடந்த காலத்தைச் சார்ந்த ஒன்று அல்ல என்றும், இந்தப் பெரும் தொற்றுநோய்க் காலத்தி லும் மறைப்பணியாற்ற அழைக்கப்படுகிறோம் என்றும் கூறியுள்ளார்.

நம்மைச் சுற்றிலும், நகரங்களிலும், நம் குடும்பங்களிலும் வாழ்வோரை நினைத்துப் பார்க்கு மாறு கேட்டுக்கொண்ட திருத்தந்தை, கோவிட்-19 பெருந் தொற்று காலத்தில் நம் வட்டத்தை விரிவுபடுத்தி, நம்மைச் சாராதவர்களுக்கும் பணியாற்றுவதில் ஒவ்வொரு நாளும் வளரவேண்டியது மிக முக்கியம் என்று கூறியுள்ளார்.

திருஅவையில் மறைப்பணியாற்றுவோரின் சான்றுகள் பற்றி நாம் தியானிக்கும்போது, அவர்களின் துணிவால் ஊக்கம்பெறுகிறோம், மற்றும் "அறுவடை மிகுதி வேலையாள்களோ குறைவு. ஆகையால் தமது அறுவடைக்குத் தேவையான வேலையாள்களை அனுப்பும் படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுகிறோம்" (லூக்.10:2) என்று திருத்தந்தையின் செய்தி கூறுகிறது.

"நாங்கள் கண்டதையும், கேட்டதையும் எடுத்துரைக்காம லிருக்க எங்களால் முடியாது" (தி.பணி.4:20) என்று, திருத்தூதர்கள் பேதுருவும் யோவானும் தலைமைச்சங் கத்தின்முன் துணிவோடு கூறிய சொற்களை மையப் படுத்தி, திருத்தந்தை தன் மறைபரப்பு நாள் செய்தியை வெளியிட்டுள்ளார்.

ஆண்டவர், ஒவ்வொருவரோடும் நட்போடு உரை யாடி அவர்களை அழைக்க பேரார்வம் கொண்ட திலிருந்து நற்செய்தி அறிவிப்புப்பணியின் வரலாறு ஆரம்பமாகிறது என்றும், இயேசுவை தாங்கள் முதன் முதலில் சந்தித்த நாள் மற்றும், நேரம் பற்றிக்கூட, முதலில் நமக்குக் கூறியவர்கள் திருத்தூதர்கள் என்றும் உரைத்துள்ள திருத்தந்தை, திருத்தூதர்கள் போன்று, காரியங்கள் வித்தி யாசமாக இருக்கமுடியும் என்பதை, நாமும், பார்த்திருக்கின் றோம், கேட்டு, அனுபவிக்கின் றோம் என்று அவர் தன-துரையில் குறிப்பிட்டார்.

# அன்பிய யூபிலி ஆண்டும் எமது பங்களிப்பும்

இ.அ.அமலரட்ணம்
அன்பிய ஆணைக்குழு




## முகவுரை

எமது ஆன்மீக வாழ்வைப் புதுப்பிக்கவும். இயேசுவின் சீடத்துவத்திற்கு சான்று பகர்ந்து வாழ்ந்து அவரின் இறையாட்சிக்கனவை நனவாக்கவும் காலத்துக் குக் காலம் திருஅவை எம்மை அழைத்து நிற்கின்றது. கடந்த ஆண்டு 'துயருறுவோர் ஆண்டை' அனுசரித்த நாம் பல்வேறு வகையில் துன்புறும் மக்களை இனங்கண்டு ஆழமான சகோதரத்துவ உறவை ஏற்படுத்தி அவர்களின் துயர் களைந்து பெ பற்றுக்கொண்ட அனுபவங்களோடு தொடர்ந்து வரும் 2021ம் ஆண்டை 'அன்பிய யூபிலி ஆண்டாகக்' கடைப்பிடிக்க இருக்கின்றோம். அகில உலகத் திருஅவை 'புனித யோசேப்பு யூபிலி' ஆண்டைக் கடைப்பிடிக்க எம்மை அழைத்து நிற்கும் வேளையில் ஆதிக்கிறிஸ்தவர்கள் வாழ்ந்த வாழ்க்கை முறையை மீண்டும் புதுப்பித்து எமது அன்றாட வாழ்விலும் கடைப் பிடிக்க மாபெரும் கொடையாக இவ்வாண்டு எமக்கு இறைவனால் தரப்படுகின்றது.

## ஏன் இந்த யூபிலி ஆண்டு?

இலங்கைத் திருஅவையில் அன்பியம் ஆரம்பிக் கப்பட்டு இவ்வருடம் நாம் 25 வருடங்களை நிறைவு செய்கின்றோம். 1996ம் ஆண்டு இலங்கைத் திருஅவையில் அன்பியம் அறிமுகப்படுத்தப்பட்டு பல சவால்களுக்கு முகம் கொடுத்து செயற்பட்டுக் கொண்டிருப்பது ஆச்சரியமே! இந்த 25 வருட நிறைவிலே அன்பிய வாழ்வை எமது மக்களிடையே வாழத் தூண்டுவதும் அனைத்துக் குடும்பங்களும் இறைவார்த்தையின் ஒளியில் வாழ்ந்து சாட்சியம் பகர வைப்பதுமே எமது முக்கிய நோக்கமாகும். அத்துடன் அன்பியங்களூடாகப் பங்கேற்கும் திருஅவையாக மாற்றுவதோடு, இறைமகன் இயேசுவின் இறையாட்சியை மலரச் செய்வது முதன்மையானதுமாகும்.

## யாழ் திரு அவையில்

யாழ் மறைமாவட்டத் திருஅவையில் தை மாதம் 17ம் திகதி புனித மரியன்னை பேராலயத்தில் யாழ் மறைமாவட்ட அன்பிய ஆணைக்குழு இயக்குநர் மற்றும் பல அருட்பணியாளர்களோடு இணைந்து எமது மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்ட விசேட கூட்டுத் திருப்பலியைத் தொடர்ந்து அன்பிய யூபிலி ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டது.

அன்பிய யூபிலி ஆண்டுக்கான கொடியை ஆயர் அவர்கள் ஏற்றி வைத்தபின் அனைத்து மறைக்கோட்டப் பிரதிநிதிகளும், பங்கு மக்களும் சூழ்ந்து நிற்க ஆயர் அவர்கள் யூபிலி ஆண்டைப் பிரகடனப்படுத்தினார். 'நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாய் இருப்பார்களாக' என்ற இறைவார்த்தைக்கு ஏற்ப அன்பிய யூபிலி ஆண்டுக்கான பதிய பாடலும் விசேட செபமும் அறிமுகப்படுத்தப்பட்டது.

## சவால்களை முறியடிப்போம்

எமது யாழ் மறைமாவட்டத் திருஅவையை பொறுத்தமட்டில் அன்பியம் தொடர்பாக கடந்த காலத்தை ஆய்வு செய்தால் பெரும் வெற்றி பெறவில்லை என்று சொல்லலாம். அவற்றை ஆய்வு செய்து தடையாக இருக் கும் காரணிகளை இனங்கண்டு சரியான தீர்வையும், வழிகளையும் காண்பது இவ்வாண்டில் எமது கடமைகளும், பொறுப்புக்களும் ஆகும். இன்றைய சூழமைவில் நாம் எதிர்கொள்ளும் அடிப்படைவாதம், இனம், மத வேறுபாடுகள், தீவிரவாதம், வன்முறைக் கலாசாரம், வறுமைநிலை, வருமானமின்மை, சாதிய வேற்றுமை போன்றவற்றுக்கிடையில் அன்பியக் குழுமங்களைக் கட்டியெழுப்புவது அவசியமும், அவரசமுமானதுமாகும். புனித யோசவ்வாஸ் இலங்கையில் மறைபணியாற்றிய காலத்தில் அன்பியம் என்ற பெயரில் இயங்காவிட்டாலும், அன்பியப் பாணியிலேயே அனைத்து மறைச் செயற்பாடு களும் இருந்ததை நாம் அவதானிக்கலாம். எனவே எமது மறைமாவட்டத்தில் அன்பிய வளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்கும் எதிரான காரணிகளை முறியடித்து இவ்வாண்டில் அன்பியத்தை இமயம் தொடவைப்போம்.

## இவ்வாண்டில் நாம் என்ன செய்யலாம்.

- அன்பியங்கள் ஆரம்பிக்கப்படவும், செயற்படவும் வெற்றியளிக்கவும் பயனளிக்கவும் இடைவிடாது செபிப் போம்.
- இப்பணியில் ஈடுபட்டு உழைக்கும் அனைவரும் இறைவனால் ஆசீர்வதிக்கப்படவும் தங்கள் அன்பியம் சார்ந்த பணிகளை பிரமாணிக்கத்தோடு முன்னெடுக்கவும் மன்றாடுவோம்.
- ஆளுக்கொரு வேதாகமம் வைத்திருந்து குடும்பமாக ஒன்றுகூடி இறைவார்த்தையை வாசித்துத் தியானித்துப் பகிர்வோம்.
- குடும்ப உறுப்பினர்கள் அன்பியமாக ஒன்றுகூடி இறைவார்த்தையை வாசித்து பகிர்வதோடு அன்பிய யூபிலி ஆண்டுக்கான செபத்தையும், பாடலையும் யன்படுத்துவதோடு அன்பிய வளர்ச்சிக்காக செபிப்போம்.
- பங்குத் திருஅவை அன்பியங்களை ஏற்படுத்த எடுக்கும் முயற்சிகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவோம்.
- நாம் வாழும் வலயத்தில் அன்பியத்தை உருவாக்கவும் அதில் இணைந்து செயற்படவும் முன்வருவோம்.
- அன்பிய ஊக்குவிப்பாளராக இருந்து அதனை வழிநடத்தத் துணிவோடு முன்வருவோம்.
- அன்பியக் குழுமத்தின் பண்புகளை சாட்சியமாக வாழ முயற்சியெடுப்போம்.
- பங்குத்திருஅவை, மறைக்கோட்டம், மறைமாவட்டம் என்ற ரீதியில் நடைபெறும் அன்பியக் கருத்தமர்வுகளிலும், பயிற்சிகளிலும் கலந்து கொண்டு பயனடைவோம்.
- அன்பிய ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்படும் போட்டிகளில் பங்கெடுத்து ஒத்துழைப்பு வழங்குவோம்.
- தேவைகளில் இருப்போரை இனம்கண்டு அன்பியங்களூடாக உதவி செய்வோம்.
- அனைவருக்கும் வேதாகமம் என்ற எண்ணக்கரு நிறைவேற வசதியுள்ளவர்கள் வறுமை நிலையில் உள்ளவர்களுக்கு வேதாகமத்தை அன்பளிப்புச் செய் வோம்.
- அன்பியங்களூடாகப் பங்கேற்கும் திருஅவையாக மாறி இறையாட்சி மலர இடைவிடாது உழைப்போம்.
- பக்திச் சபைகள், அருட்பணிச் சபைகள் மற்றும் பங்கேற்கும் அமைப்புக்கள் ஒன்று கூடும்போது இறை வார்த்தையை வாசித்து ஏழுபடிமுறை நற்செய்திப் பகிர்வை நடத்துவோம்.

## பங்குத் தந்தையருக்குக் கரம் கொடுப்போம்

பங்குத்தந்தையர்கள் பல பணிப்பொறுப்புக்களுக்கு மத்தியிலும் பல்வேறு விதமான சவால்களுக்கு முகம் கொடுத்தும் பணியாற்றுவதை நாம் காண்கின்றோம். இருப்பினும் அன்பியத்தின் வளர்ச்சிக்கு இவர்களின் பங்களிப்பு முதன்மையானதும், அவசியமானதுமாகும். இவர்களின் பணிச் சுமைகளைக் குறைக்க பொதுநிலையினரும், பக்திச் சபைகளும் பங்கேற்கும் அமைப்புக்களும் முன்வரவேண்டும். பங்குத்தந்தையர்களின் நேரசூசிக்கு அமைவாக அன்பியக் கூட்டங்களை ஒழுங்குபடுத்துவதும், அன்பியக் குழுமத் திருப்பலிகளை ஒப்புக் கொடுப்பதும் அன்பியப் பகிர்தல் விழாக்களை நடாத்துவதும் வரவேற் கத்தக்கதாகும். ஒவ்வொரு வலயங்களிலும் குடும்பங் களின் எண்ணிக்கைக்கேற்ப ஆகக் குறைந்தது 15 குடும்பங்களுக்கு ஒரு அன்பியம் என்ற ரீதியில் சூழமைவுக்கேற்ப ஏற்படுத்துவது சாலச்சிறந்ததாகும்.

## ஏழுபடிமுறை நற்செய்திப் பகிர்வு

ஆசிய ஆயர் பேரவை குடும்பங்கள் இலகுவா- கப் பின்பற்றக்கூடிய ஏழுபடிமுறை நற்செய்திப் பகிர்வை எமக்குத் தந்திருக்கின்றார்கள். இந்த நடைமுறையே எமது யாழ் மறைமாவட்டத்தில் கடைப்பிடிக்கப்படுகின்றது. அன்பியம் என்பது ஒரு பக்திச் சபையாகவோ அல்லது வழிபாட்டுக் குழுமமாகவோ மாறாமல் அது ஒரு கிறிஸ்தவ வாழ்க்கை முறை என்பது தெளிவாக உணரப்பட வேண்டும். இம் முறையில் அன்பியத்தை நடத்துகின்ற போது அனைவரின் கரங்களிலும் திருவிவிலியம் இருப் பது வரவேற்கத்தக்கது. திருவிவிலியம் கரங்களில் இருந்தால் தான் நாமும் வாசித்து அடுத்தவர் வாசிப் பதை ஆழமாகக் கிரகிக்கக்கூடியதாக இருக்கும். அத்துடன் இலகுவாக எம்மைத் தொட்ட இறை வார்த்தைகளைத் தெரிவு செய்து பகிரக்கூடியதாகவும் இருக்கும். அன்பிய அமர்வுகளில் குழுமங்கள் தெரிவு செய்யும் அல்லது முன்மொழியும் பணி மிகமிக முக்கியமானது, கட்டாயம் நிறைவேற்றப்பட வேண்டியதும் ஆகும்.

## நிறைவாக

ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற அன்பிய ஆண்டு 2022ம்ஆண்டு தை மாதம் 08ம் திகதி நிறைவுக்கு வரும். எனவே இவ்வருடம் முழுவதும் அன்பியம் சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபட்டு உழைப்பதே இறைவன் எமக்குத் தரும் அழைப்பாகும். "நீங்கள் என்னை தேர்ந்து கொள்ளவில்லை, நான் தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன்" என்ற இறைவார்த்தைக்கொப்ப இறைவனின் குரலுக்கு செவிகொடுத்து அன்பிய களங்களில் பணிபுரிவோம். ஒவ்வொருநாளும் இலங்கைத் திருஅவை எமக்குத் தந்த அன்பிய ஆண்டுக்கான செபத்தைப் பக்தியோடு செபிப்போம். எமது யாழ். மறைமாவட்டத்தில் அன்பியம் வளர்ந்து, மலர்ந்து மணம் வீசவும் பங்கேற்கும் திருஅவையாகத் திகழவும் இறையருள் வேண்டுவோம்.



உடுவில் பங்குத் திருஅவையில் அன்பிய யூபிலி ஆண்டு தொடர்பான கருத்தமர்வு 23.01.2021 சனிக்கிழமை பங்குத்தந்தை அருட்பணி எஸ்.லியோ ஆம்ஸ்ரோங் தலைமையில் நடைபெற்றது. 60 இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். யாழ் மறைமாவட்ட அன்பிய ஆணைக்குழு இயக்குநர் அருட்பணி மில்வர்வாஸ் (CMF) அடிகள், அருட்பணி. E.S.சசிகரன் அடிகள் மற்றும் மறைமாவட்ட அன்பிய வளவாளர் திரு.இ.அ.அமலரட்ணம் ஆகியோர் இக்கருத்தமர்வை நெறிப்படுத்தினர்.



மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயத்தில் அன்பிய யூபிலி ஆண்டிற்கான ஆரம்ப நிகழ்வு கடந்த 24.01.2021 ஞாயிற்றுக்கிழமை காலைஇடம்பெற்றது. யாழ் மறைமாவட்ட அன்பிய ஆணைக்குழு இயக்குநர் அருட்பணி ஏ.மில்பர்வாஸ்(CMF) அடிகள் அன்பியக் கொடியை ஏற்றிச் சிறப்புத் திருப்பலியை ஒப்புக்கொடுத்து ஆரம்பித்து வைத்தார்.13 அன்பிய குழுமத்தின் பங்களிப்போடு முன்னெடுக்கப்பட்ட இந்நிகழ்வில் அன்பிய வளவாளர் திரு.இ.அ.அமலரட்ணம் சிறப்புரை வழங்கியிருந்தார்.

## காவலன் கலசம்

# கடந்த 25 வருடங்களில் யாழ் மறைமாவட்ட அன்பியம் பற்றிய ஒரு நேர்காணல்

- அருட்பணி. எஸ்.லியோ ஆம்ஸ்ரோங்

நேர்காணல்:
அருட்பணி E.S.சசிகரன்



**1. யாழ் மறைமாவட்டத்தின் அன்பிய வாழ்க்கை முறையின் ஆரம்ப நிலை பற்றிய உங்கள் கருத்து?**

யாழ்மறைமாவட்டத்தில் அன்பிய வாழ்க்கை முறை ஆரம்பிக்கப்பட்டு 25வது யூபிலி ஆண்டிலே கால்பதிக்கின்ற பொழுது எவ்வாறு ஆரம்ப கால வாழ்க்கை முறை பற்றி நாங்கள் சிந்திப்போமாக இருந்தால் உண்மையிலேயே அந்த ஆரம்ப காலம் 95,96ம் ஆண்டுகளிலே இடப்பெயர்வு களுக்கு முன்னர் எமது மறை மாவட்டத்தில் இருந்து குருக்கள் கண்டிக்கு அனுப்பப்பட்டு, தங்கள் பயிற்சியை முடித்து வந்தார்கள். அதன் பின்னர் பிலிப்பைன்ஸ், இந்தியா போன்ற நாடுகளுக்கும் சென்று பயிற்றப்பட்டு எங்கள் மக்களுக்கும் இந்த அன்பிய வாழ்வு பயிற்றப்பட்டது. ஆரம்ப காலங்களில் சிறப்பாக இளவாலை மறைக்கோட்டத்தில் எல்லாம் அன்பியம் கொடி கட்டிப்பறந்ததுஎன்று சொல்லலாம். அன்பிய வாழ்க்கை ஆரம்பிக்கப்பட்ட அந்தக் காலங்களில் இடப்பெயர்வுகள், தொடர்ச்சியாகப் போர்கள் இந்த அன்பிய வாழ்வைக் கட்டியெழுப்புவதிலே பெரும் சவாலாக அமைந்திருந்தது. இருப்பினும் 25 ஆண்டு காலத்தின் பின் நாங்கள பார்க்கின்ற பொழுது இந்த வளர்ச்சிக்காகப் பல குருக்கள், துறவிகள், பொதுநிலையினர், எமது ஆயர்கள் முன்னின்று உழைத்து இருக்கிறார்கள், அர்ப்பணித்து இருக்கிறார்கள். இந்த வாழ்ககை முறை பலராலும் கவரப்பட்ட ஒரு வாழ்க்கை முறையாக இருந்தது என்பதை நான் அவதானித்து இருக்கின்றேன்.

**2. பங்கிற்கு திருஅவை என்னும் எண்ணக்கருவில் அன்பிய வாழ்வின் மறு மலர்ச்சி எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கிறீர்கள்?**

பங்கேற்கும் திருஅவை என்பதன் கருத்து உண்மையிலேயே சவாலான கருத்து. இன்று எமது தலத்திரு அவையிலேயே பல பங்குகளிலும் நூறு வீதமான பங்குகளிலும் கூட இந்த அன்பிய வாழ்க்கை முறையின் அடிப்படையிலே தான் வலய ரீதியாக மக்கள் பிரிக்கப்பட்டு அன்பியங்களாக உருவாக்கப்பட்டு அன்பியங்களில் இருந்து எம் ஆலயத்தினுடைய அருட்பணிச் சபைக்கான தெரிவு-கள் இடம்பெறுகின்றன. ஒரு சிலரிடமிருந்த நிர்வாக அலகை மக்கள் மயப்படுத்தப்பட்ட நிர்வாக அலகாக மாற்றியிருப்பது இந்த அன்பிய வாழ்க்கை முறை என்பதிலே எந்த சந்தேகமும் இல்லை. அன்பிய வாழ்வின் ஒரு மறுமலர்ச்சி என்பது இந்த பங்கேற்கும் திருஅவையின் உதயத்திலே தான் தங்கியிருக்கின்றது. ஆனால் அது இன்னும் அதிகம் வாழப்படவேண்டியிருக்கின்றது. அது திருஅவையின் உடைய உயர்நிலைகளிலிருந்து அந்த ஆலயங்கள் வரையிலும் இந்தப் பங்கேற்கும் திரு அவை இன்னும் கவனம் செலுத்தி முன்னேற்றப்படுமாக இருந்தால் அது ஒரு மக்கள் மயப்படுத்தப்பட்ட, விசுவாசமயப் படுத்தப்பட்ட ஒரு எழுச்சியாக மாறும் என நினைக்கின்றோம். அத்தோடு இதற்காக எமது திருஅவையின் ஒவ்வொரு தலத் திருச்சபையிலும், பங்குகளிலும் மறைக்கோட்டங்களிலும் இதற்கான முக்கியத்துவத்தை உணர்ந்து அதை நாங்கள் முன்னெடுக்க வேண்டிய தேவை இருக்கின்றது என்பதை உணர்கின்றேன்.

**3. 25 வருடம் கடந்து வந்த பாதை யில் அன்பிய வாழ்வு வாழப்பட எதிராக இருந்த சாவல்கள்?**

பல சவால்களின் மத்தியில் தான் இந்த அன்பிய வாழ்வு நகர்ந்து வருகின்றது என்பது மறுக்கப்பட முடியாத உண்மை. இதிலே ஒரு விடயம் குருக்களுக்குப் போதியளவிலே அனுபவ ரீதியாக அறியாத ஒன்றாக இருப்பது. முதலாவது தடையாக நாங்கள் பார்க்க முடிகின்றது. அண்மையிலே எமது முன்னை நாள் இயக்குநர் தந்தை அருட்தந்தை ரவிச்சந்திரன் அடிகளார் அவர் ஆய்வு செய்ததின் படி பல தடைகளை அடையாளம் கண்டார். அதில் ஒன்று பங்குத்தந்தையர்களுக்குப் போதிய ஆர்வமின்மை அல்லது மக்களுக்கு அதிலே போதிய ஈடுபாடின்மை பல பங்குத்தந்தையர்களுக்கு இது பற்றிய அனுபவ அறிவு இன்மை போன்றவை தங்கியிருக்கின்றன. சாதிய வாழ்க்கை முறைஎமக்குதடையாகஇருக்கின்றது. எம் மக்களுடைய இடப்பெயர்வுகள், போர்கள் ஒரு தடையாக இருந்திருக்கின்றது. எமது மக்களுடைய சமூக ஏற்றத்தாழ்வுகள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் இந்த அன்பிய வாழ்வை முன்னெடுப்பதில் பல தடையாக இருக்கின்றது. இன்னும் பல தடைகளையும் நாங்கள் அவதானிக்க முடியும் என்று நினைக்கின்றேன்.

**4. முன்னைய அன்பிய இயக்குநர் என்ற முறையில் அன்பிய வாழ்வு சாத்தியமாகும் என உணர்த்திய மறக்கமுடியாத அனுபவம்?**

இந்த அன்பிய வாழ்வு எமது மறை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படதில் இருந்து எனக்கும் இந்த அன்பிய வாழ்வில் ஈடுபாடு இருந்ததை நான் அவதானிக்கின்றேன். நாங்கள் நான்காம் வருட குருமட மாணவர்களாக இருந்த போது அனுப்பப்பட்ட பயிற்சிகள் அல்லது குருமடத்தில் எமக்குத்தந்த பயிற்சிகள், குருவாக வந்த பின் எமக்கு ஏற்பட்ட அனுபவங்கள், பயிற்சிகளின் அடிப்படையில் எமது மறைமாவட்டத்திலும், எமது தேசிய ரீதியிலும், தெற்காசிய ரீதியிலும் நான் சென்று வந்த பயிற்சிகளின் அடிப்படையிலே நான் பார்க்கின்ற பொழுது இந்த அன்பியம் ஒன்று தான் எம் பங்கை எழுச்சியுள்ள ஒன்றாக மாற்ற முடியும் என்று நான் கருதுகின்றேன். ஏனென்றால் பல இடங்களிலே என்னுடைய பங்குத்தளங்களிலே எங்கெல்லாம் அன்பிய வாழ்வை நெறிப்படுத்தினேனோ அங்கெல்லாம் வெற்றி ஏற்பட்டது. அதே போல அருட்தந்தை ரவிச்சந்திரன் அவர்களின் சாவகச்சேரிப் பங்கிலே நான் பார்த்த அன்பிய வாழ்வு நாவாந்துறையிலே நாங்கள் பார்த்த அன்பிய வாழ்வு உண்மையிலேயே மெச்சத்தக்க ஒரு விடயமாக இருந்தது. ஆனால் அவை பின்பு தொடரப்படாமல் இருப்பதும் தூர்ந்து போன விடயம் தான். ஆகவே பல இடங்களில் அசாத்தியமான விடங்களை சாத்தியமாக்கியது. இந்த அன்பியம் தான். என்னைப் பொறுத்தவரையில் எமது மறைமாவட்டத்திலுள்ள திரு அவையில் இருக்கக்கூடிய எந்த ஒரு அமைப்பையும் விட அன்பியம் ஒன்றினால் பல மாற்றங்களை அடித்தளத்திலிருந்து உருவாக்கலாம் என்ற நம்பிக்கையும் அவாவும் என்னிடமிருப்பதை நான் உணர்கின்றேன்.

**5. 25 வருட அன்பிய யூபிலி ஆண்டைக் கொண்டாடும் நிலையில் மேலும் அன்பிய வாழ்வு முறை வரை எத்தகைய செயற்பாடுகளை முன்னெடுக்கலாம்?**

எமது மறைமாவட்டத்திலே 25 ஆண்டுகளைக் கடந்திருக்கின்ற இச்சூழ்நிலையில் இந்த அன்பிய வாழ்வை நாம் மேம்படுத்த வேண்டுமாக இருந்தால் அதன் முடிவு முன்னுரிமைப் பணியாகக் கொடுக்கப்பட்டது. அது இன்னும் எமது திரு அவையினால் அதற்கான பூரணத்துவம் கொடுக்கப்படவில்லை என்று தான் நான் நினைக்கின்றேன். அதற்காக இந்த ஆண்டிலே பல குருக்களை இணைத்து ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டிருக்கின்றது. இதன் வழியாக ஆயர்தந்தை அவர்களும் அதற்கான நிதிகள் பலவற்றை உருவாக்கிக் கொடுத்து இருக்கிறார். ஆகவே முதலிலே ஆயரிடமிருந்தும் குருக்களிடமிருந்தும் இதற்கான ஒரு சமிக்ஞை தெரிகிறது. நல்லது வரவேற்கத்தக்கது. ஆனால் அது இந்த யூபிலியோடு மட்டும் நின்று விடாமல் இன்னும் பல ஆண்டுகள் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. ஏனென்றால் ஆசியத் திருஅவை இந்தப் பங்கேற்கிற வாழ்வு என்பதைச் சாத்தியமாக்கக் கூடிய ஒரேயொரு சாதனம் இந்த அன்பிய வாழ்வு முறை என்பதை நடைமுறைப்படுத்தி இருந்தாலும் இதை எமது மறைமாவட்டத்திலே இன்னும் பலர் உணராததன்மை ஒன்று இருக்கின்றது. ஆகவே அதை உணர்ந்து கொள்ளக் கூடியவர்கள் அவர்களால் பல மாற்றங்களை உருவாக்கலாம் அதேவேளையிலே எமது குருக்களுக்கு இது பற்றி ஒரு அனுபவ அறிவை நாம் வழங்குகின்ற பொழுது தான் அவர்களுக்கு அது பற்றித் தங்கள் பங்குகளிலே தெளிவுபடுத்த முடியும். எனவே குருக்களுக்கும், துறவிகளுக்கும், பக்தி சபையினருக்கும், அருட்பணிச் சபையினருக்கும் அன்பிய வாழ்வின் முக்கியத்துவத்தை நாங்கள் எடுத்தியம்பி தொடர் பயிற்சிகள், தொடர் உருவாக்கங்கள் கூட்டங்களூடாக அன்பிய வாழ்வை மேம்படுத்தலாம் என்று கருதுகின்றோம்.

# சிறுவர் தொழிலாளர்கள்



A.சுவேனி

ஒவ்வொரு மனிதருடைய வாழ்க்கைப் பராயங்களில் குழந்தைப்பருவம், சிறுவர் பருவம் என்பது மிக அழகான தும், முக்கிய மானதும் ஒன்றாகும். இப்பராயத்திலேயே ஒவ் வொரு பிள்ளையும் மிகச் சரியான மனமுதிர்ச்சியையும், அறிவு விருத்தியையும் பெற்றுக்கொள்கின்றணர் அந்த வகையில் சிறுவர் பராயத்தில் ஒவ்வொரு பிள்ளைக்கும் கிடைக்கக் கூடிய அடிப்படை உரிமைகளையும், கடமைகளையும் நிறைவேற்றுவதில் பெற்றோர்களுக்கும், சமூகத்திற்கும், அரசுக்கும் மிகப்பெரிய பங்களிப்பும், கடமையும் உள்ளது.

இதனடிப்படையில் "சிறுவர் தொழிலாளர்கள்" என்பதை ஐ.நா சபை பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்துகிறது. "18 வயதிற்கும் உட்பட்ட அனைவரும் சிறுவர்கள். இப்பராயத்தில் சிறுவர்களின் உடலியல் மற்றும் உளரீதியான பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடிய வகையிலான தொழில்களில் ஈடுபடுத்துவதையே சிறுவர் தொழில் என குறிப்பிடுகின்றது. இவ்வாறான தொழில்களில் ஈடுபடுவது உடலியல், உளவியல் மற்றும் சமூக ரீதியாக சிறுவர்களுக்கு அபாயகரமானதாக அமையும்" எனக் குறிப்பிடப்படுகிறது.

*சிறுவர் தொழிலாளர்கள் பல வகைகளில் உள்ளன.*

01. கட்டாயமாக வேலைக்கமர்த்தப்படுதல்.
02. சிறுவர்களை விற்றல், கடத்தல், மனித வியாபாரம் செய்தல்.
03. சிறுவர்களைப் பலாக்காரத்தில், பாலியல் தொழிலில் ஈடுபடுத்தல், தவறான படங்களின் மூலம் வருமானம் பார்த்தல்.

சிறுவர் தொழிலாளர்கள் பெரும்பாலும், தொழிற்சாலைகள், கட்டட வேலைகளில் கூலிகளாக நியமிக்கப்படுதல், சுற்றுலாத் தளங்கள், திரையரங்குகள், உணவகங்கள், எனப் பல்வேறு தரப்பட்ட பணியகங்களில் மிகக் குறைந்த சம்பளத்துடன் பணிக்கமர்த்தப்படுகின்றனர். அத்துடன் ஆபத்தான தொழில்களிலும் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

*சிறுவர் தொழிலாளர்கள் உருவாக்கத்திற்கான காரணங்களை நோக்கும் போது,*

01. வறுமை
02. கல்வி பற்றிய சரியான விழிப்புணர்வு இன்மை.
03. பெற்றோரின் சரியான அரவணைப்பு இன்மை.
04. அதிகரித்து வரும் விலைவாசி.
05. ஒவ்வொரு மனிதரும் அனுபவிக்க வேண்டிய உரிமைகள் தொடர்பான சட்ட அறிவின்மை.
06. குழந்தைத் தொழிலாளர் ஏற்ற சட்டம் வலுவானதான இல்லை.
07. சமுதாயப் பிரச்சினை
08. சாதி - குலத்தை அடிப்படையாகக் கொண்ட தொழ்களை செய்தல்

இவ்வாறான பல காரணங்களால் சிறுவர் தொழிலாளர்கள் உலகளாவிய ரீதியில் உருவாக்கப்பட்டு அதிகரித்து வருகின்றனர்.

சிறுவர்கள் தொழில்களில் ஈடுபடுவதால் ஏற்படும் பாதிப்புக்களை நாம் 3 வகையாக நோக்கலாம்.

*01. உடல் ரீதியான பாதிப்பு*

உடல் நலனைப் பாதிக்கக்கூடிய தொழில்களில் ஈடுபடுவதன் மூலம் உடல் அங்கங்களை இழத்தல், ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் சிறுவயதிலேயே ஆபத்தான நோய்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

*02. உளவியல் ரீதியான பாதிப்பு*

இத் தொழில்களில் ஈடுபடுவதன் மூலம் மனரீதியான வளர்ச்சி குறிப்பாக எழுத் தறிவு, நுண்ணறிவு, நடைமுறை வாழ்க்கை பற்றிய பொதுவான அறிவு இல்லாமல் போதல். விரக்தியான சூழலிலேயே வாழும் நிலமை ஏற்படுகின்றது.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

# காவலன் கலசம்




# ஏன் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி செ. அன்புராசா**

*(அருள், யாழ்ப்பாணம்)*
**கேள்வி: 'ஒன் லைன்' வகுப்புக்கள் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**
**ப:** அதில் நினைப்பதற்கு என்ன இருக்கின்றது அருள்! காலத்தின் தேவைக்கேற்ப தொழில் நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டிய சூழ்நிலை! ஒரு வகையில் இத்தொழில்நுட்பத்தால் படிக்கக் கூடிய வாய்ப்புக்கள் பல உண்டு. ஆனால், ஒரு வகையினரைப் பற்றிச் சிந்தித்தே ஆகவேண்டும்! வகுப்புக்களுக்குச் சென்று ஒழுங்காகப் படிக்காதவர்கள் ஒண்லைன் வகுப்புக்களில் எப்படிப் படிப்பார்கள் என்பது கேள்விக்குரிய விடயம்தான்! சில-வேளைகளில் லைன் ஓணாக இருக்கும்! ஆள் ஒண் லைனில் இருப்பாரா அல்லது வேறு எங்காவது நிற்பாரா என்றும் யோசிக்கத்தான் வேண்டும்!

*(ரகு, லண்டன்)*
**கே: காலநிலை மாற்றங்களால் பாரிய வரட்சி ஏற்படுகின்றது அல்லது வெள்ளம் ஏற்படுகின்றது! தண்ணீர் குறைந்தாலும் பிரச்சினைதான், கூடினாலும் பிரச்சினைதான்போல் இருக்கின்றது!?**
**ப:** உண்மைதான் ரகு! தண்ணீர்பற்றி ஒருவர் கூறியது சிந்திக்கத்தக்கது! 'மீனவன் தண்ணீரில் சாகிறான். விவசாயி தண்ணீர் இல்லாமல் சாகிறான். இன்னும் கொஞ்சப்பேர் தண்ணியடிச்சுச் சாகிறார்!' பாருங்கள்! தண்ணீரில் எத்தனை பிரச்சினைகள் என்று!

*(சங்கர், மன்னார்)*
**கே: 'பாடசாலைப் பிள்ளைகளுக்கு ஏன் போன்!?' என்று ஒரு வருடத்திற்கு முன் பெற்றோர்கள் கூறினார்கள். இப்போது அவர்களே பிள்ளைகளுக்கு போன் வாங்கிக்கொடுக்கும் நிலைக்கு வந்துவிட்டார்கள்! இதனை என்ன என்பது?**
**ப:** சங்கர், 'பாடசாலைக்குள் போன் கொண்டுவரக்கூடாது' என்றார்கள். இப்போது பாடசாலையே போனில்தான் நடக்கிறது! அப்ப, பெற்றோர் வாங்கிக் கொடுக்கத்தானே வேண்டும்.

*(மகேஸ், யாழ்ப்பாணம்)*
**கே: போர்க்குற்றம், மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணைசெய்ய மூவரடங்கிய ஆணைக்குழுவை நாட்டின் அதிபர் கோத்தபாய ராஜபக்ச நியமித்திருப்பதாகத் தகவல். இவர்களின் விசாரணை எப்படியிருக்கும்?**
**ப:** மகேஸ், களவு ஒன்றைப்பற்றி விதானையார் ஒருவர் விசாரிக்கவேண்டி இருந்தது. கள்வனைத் தன் வீட்டுக்குள் வைத்துக்கொண்டு விதானையார் களவு பற்றி விசாரணை செய்த கதை மாதிரியாகத்தான் இவ்விசாரணையும் இருக்கும்!

*(கண்ணன், மன்னார்)*
**கே: நம்நாட்டு நீதிமன்றங்களில் பல்லாயிரக்கணக்கான வழக்குகள் நிலுவையில் இருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. இது உண்மையா? உண்மையாயின், ஏன் இப்படி வழக்குகளை நிலுவையில் போட்டு இழுத்தடிக்கின்றார்கள்? இதிலும் ஏதும் அரசியல் உண்டா?**
**ப:** கண்ணன், பல்லாயிரக்கணக்கான வழக்குகள் நிலுவையில் கிடப்பதோடல்லாமல் பல ஆண்டுகளாகவும் அவை கிடப்பில் கிடப்பதாகவும் தகவல்! இந்நிலையை அழகான ஒரு கதையின் மூலம் ஓர் அன்பர் விளக்குகின்றார். எருமையொன்று தறிகெட்டு ஓடிக் கொண்டிருப்பதை அவதானித்த யானை அதற்கான காரணத்தை வினவுகின்றது. அதற்கு எருமை, "அரசாங்கம் பசுமாடுகளைக் கைதுசெய்கின்றது? அதனால் தான் நான் தப்பி ஓடுகிறேன்!" எனப் பதில் கூறுகின்றது. அதற்கு யானை, 'ஆனால், நீ எருமைதானே! பிறகேன் ஓடுகிறாய்!?' என்றதற்கு எருமை, "நான் எருமை என்பதை நிரூபிப்பதற்கு, இலங்கை நீதிமன்றங்களில் இருபது ஆண்டுகளாவது செல்லும்!" எனக் கூறிக்கொண்டு தொடர்ந்து ஓடியது. எருமை கூறியதை நன்கு செவிமடுத்துக் கொண்டு நின்ற யானை, ஒரு கணம் யோசித்துவிட்டுத் தானும் ஓடத் தொடங்கியது! நிலைமை புரிகிறதா கண்ணன்! யாரோடும் பிரச்சினைப் பட்டு வழக்காடுவதற்காக மட்டும் நீதிமன்றங்களுக்குச் சென்றுவிடாதீர்கள்! ஆயுளில் அரைவாசி கோட்டில் முடிந்துவிடும். நிற்க, இதனை எழுதும் போது, நீதித்துறையைப்பற்றி விமர்சித்த பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நடந்தது நமக்கும் நடந்துவிடுமோ என்ற பயமும் கொஞ்சம் இருக்கிறது!

*(மதி, யாழ்ப்பாணம்)*
**கே: உங்கள் பதில்களால் அசத்துகின்றீர்கள்! இது தொடரும்தானே?**
**ப:** ஐயோ, என்னைப் புழுகாதிங்கோ மதி! என் கடமையைத்தானே செய்கிறேன். அடுத்து, இடராமல் தொடரும் என்றுதான் நம்புகின்றேன்!

*(செல்வி, யாழ்ப்பாணம்)*
**கே: நம் நாட்டில் எல்லாவற்றிலும் அரசியல் புகுந்து விளையாடுகின்றது போலத்தான் தெரிகின்றது! இப்போது கொரோனா நோய்தடுப்பூசியிலும் அரசியல் செய்கின்றார்கள் எனச் சொல்லுகின்றார்கள்! இதிலுமா!?**
**ப:** செல்வி, நம் நாட்டில், அரசியல், எதில் இல்லை என்று முதலில் சொல்லுங்கள்! பின்னர்ஊசியில் இருக்கின்றதா இல்லையா என்று நான் சொல்கிறேன்.

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

# நான் யார்? பிறரைத் தீர்ப்பிடுவதற்கு...

பிறரைக் குற்றவாளிகள் எனத் தீர்ப்பு அளிக்காதீர்கள். அப்போது தான் நீங்களும் தீர்ப்புக்கு உள்ளாக மாட்டீர்கள். நீங்கள் அளிக்கும் தீர்ப்பையே நீங்களும் பெறுவீர்கள். நீங்கள் எந்த அளவையால் அளக்கின்றீர்களோ அதே அளவையாலேயே உங்களுக்கும் அளக்கப்படும்.

உங்கள் கண்ணில் இருக்கும் மரக்கட்டையைப் பார்க்காமல், உங்கள் சகோதர, சகோதரிகள் மற்றும் ஏனைய மக்களின் கண்ணில் இருக்கும் துரும்பை நீங்கள் கூர்ந்து கவனிப்பதேன்? அவர்களிடம் உங்கள் கண்ணில் இருந்து துரும்பை எடுக்கட்டுமா என்று எப்படிக் கேட்கலாம்?

இதோ! உங்கள் கண்ணில்தான் மரக்கட்டை இருக்கிறதே. வெளிவேடம் காட்டாமல் முதலில் உங்கள் கண்ணில் இருக்கும் மரக்கட்டையை எடுத்து எறியுங்கள். அதன் பின்பு உங்கள் சகோதர சகோதரிகள் ஏனைய மக்களின் கண்ணில் இருக்கும் துரும்பை எடுக்க உங்களுக்குத் தெளிவாகக் கண் தெரியும். (மத்தேயு 7:1-5)

**அனுபவச் சிந்தனை**

ஒருவரைக் குறைகூறி, அவரைப் போகவிட்டு அவரைப் பற்றி இல்லாதது பொல்லாது கதைப்பது நம் அனைவரிலும் பொதுவாகக் காணப்படும் ஒரு குண இயல்பாக தற்போது மாறியுள்ளது. இவ்விடயம் ஆளுக்கு ஆள் வேறுபடலாம். இந்தக் குணம் இல்லாதவர்கள் என்று சுட்டிக்காட்டக்கூடிய மக்கள் அரிதிலும் அதிதாகவே காணப்படுகின்றனர்.

**ம.சூசைமுத்து**

விண்ணம் இருந்து மண்ணகம் வந்த இறைமகன் இயேசுவைத் தவிர எம்மை அன்பு செய்ய, மன்னிக்க வேறு எவருமில்லை. இறைமகன் இயேசு பிறரைத் தீர்ப்பிடாதபொழுது நாம் மட்டும் ஏன் பிறரைத் தீர்ப்பிடவேண்டும்? சரியாக ஆராய்ந்து பார்க்காமல் தம்மிடம் இருக்கும் அரைகுறை விபரத்துடன் தீர்ப்பிடுவது தவறிலும் தவறே.

பிறரிடம் காணும் குறைகளை வெளிச்சம் போட்டு அறிக்கையிடும் முன், அக்குறைபாடுகள் நம்மிடம் உள்ளதா? இல்லையா என்பதை ஆராய்ந்து மற்றவரைத் தீர்ப்பிடாது இருப்போம். அன்பியமாக அனைவருடனும் அன்புடன் வாழ்வோம்.

## திருக்கலைகள்....

(4ம் பக்கத் தொடர்ச்சி)


**திருக்கலைஞர்கள் எத்தகைய பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும்?**

அ) அவர்கள் உண்மையான கலைச் சிறப்பைக் கவனத்தில் கொள்தல் அவசியம்

ஆ) நம்பிக்கை, இறைப்பற்று ஆகியவற்றை இறைமக்களின் உள்ளத்தில் வளர்க்கக் கூடிய விதத்தில் ஒவ்வொரு அடையாளத்தின் உண்மைப் பொருள் விளங்கும்படியாகவும் அவர்களின் அலுவல் அமைந்திருக்கும் படியாகவும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

**பீடம் எவ்வாறு அணி செய்யப்பட வேண்டும்?**

பீடம் அணி செய்யப்படுவது மிதமான அளவோடு இருக்கவேண்டும் காலத்தின் தன்மைக்கு ஏற்றவாறு மிதமான அளவில் மலர்களால் அணி



செய்யப்பட வேண்டும் மலர்கள் பீடத்தின்மீது இருப்பதை விட பீடத்தைச் சுற்றி வைக்கப்பட வேண்டும் பீடத்தின் மேல் திருப்பலிக்குத் தேவையான பொருள்கள் மட்டுமே வைக்கப்பட வேண்டும் (ஒலி வாங்கிகள் விதிவிலக்கு உடையவை).

பீடத்தின்மீதோ அதன் அருகிலோ வைக்கப்படுகின்ற மெழுகுதிரித் தண்டுகள் பீடத்தில் இருப்பதையோ நிகழ்வதையோ பார்க்கத் தடையாக - இருக்கக்கூடாது.

**கோவிலை எவ்வாறு அணி செய்ய வேண்டும்?**

எந்தவித பகட்டும் இன்றி மாண்புமிகு எளிமையை உணர்த்துவதாய் இருக்க வேண்டும் புனித இடத்திற்குப் பெருமை சேர்ப்பதாகவும் இருக்கவேண்டும்.

**நற்கருணைப் பேழை என்பது என்ன?**

அது எவ்வாறு கோவிலில் இடம் பெற்றிருக்க வேண்டும்? தூய்மைமிகு நற்கருணையைப் பாதுகாக்கப் பயன்படுவதுதான் நற்கருணைப் பேழை. ஒரே ஒரு பேழைதான் இடம்பெற வேண்டும். இது மேன்மைமிக்கதாகவும் தெளிவாக எல்லாராலும் காணக்கூடியதாகவும் இறைவேண்டல்செய்வதற்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும். எனவே பொருத்தமான, தகுதியான இடத்தில் இருக்கவேண்டும்.

**நற்கருணை எழுந்தேற்ற அரியணையில்** (Eucharistic Exposition) **பயன்படுத்தப்படும் மின் ஒளியைப் பற்றி...**

ஒரு கலைக்கூடத்திலோ வெண் திரையிலோ கொடுக்கப்படுவது போன்ற அலங்கார மின் விளக்குகளைத் தவிர்ப்பது நல்லது. எந்த ஒரு மின் ஒளி அலங்காரமும் நற்கருணைக்கு மட்டுமே நமது ஈர்ப்பைத் திருப்புவதாக அமைய வேண்டும். அதே சமயத்தில் எந்த ஒரு மின் ஒளி அலங்காரமும் நற்கருணைப் பேழைமுன் எப்போதும் எரிந்து கொண்டிருக்கும் சிறப்பு விளக்குக்கு மாற்றாக அமைய முடியாது.

## இளைஞர்களுடைய பாதைகள்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பணி நெகிழ்வானது, எளிதானது என்று எண்ணிவிடாதீர்கள். மறைத்தூதுப்பணியின் பொருட்டு சில இளைஞர்கள் வாழ்வையே ஈந்துள்ளனர். கொரிய ஆயர்கள் இப்படிக் கூறுகின்றனர்: "மறைச்சாட்சிகளின் மாதிரியைப் பின்பற கோதுமை மணிகளாகவும் மானிட மீட்பிற்கான கருவாக விளங்க முடியும். நமது இறைநம்பிக்கை கடுகு விதை மிகச் சிறியதாக இருந்தாலும், இறைவன் அதற்கு வளர்ச்சியைத் தந்து, அவர் தம் மீட்புப்பணிக்காக அதனை ஒரு கருவியாகப் பயன்படுத்துவார். இளம் நண்பர்களே! நமது உலகை மாற்றுவதற்கான உங்கள் ஆற்றலையும் உங்கள் துணிச்சலையும் உங்கள் படைப்புத்திறனையும் பகிர்ந்தளிக்க நாளை வரை நீங்கள் காத்திருக்க வேண்டாம்.

உங்கள் இளமை என்பது 'இரண்டுக்கும் இடைப்பட்ட காலம்' (in between time) அல்ல. இறைவனுடைய இப்போது நீங்கள் தான் நீங்கள் கனிதரவேண்டும் என்றே அவர் விரும்புகிறார். 'ஏனெனில் கொடுப்பதில் தான் நாம் பெறுகிறோம்" நிகழ்காலத்தை அர்ப்பணத்தோடும் தாராள உள்ளத்தோடும் நம்மால் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு அனுபவிப்பதுதான் ஒளிமயமான எதிர்காலத்திற்குத் தயாரிப்பதற்குச் சிறந்த வழியாகும்.

# ஈழத்தில் அப்போஸ்தலிக்கக் கார்மேல் சகோதரிகளின் நூற்றாண்டுப் பணி!

அன்னை மாமரியின் வழியில் பயணிக்கும் இந்தியா, இலங்கை இணைந்து ஒரே குடும்பமாக நன்றி விழா கொண்டாடுகின்றனர். இது ஒரு நன்றி விழா, மகிழ்வின் விழா, பெருவிழா. கொரோனாவின் கொடூரத் தாக்கங்களின் மத்தியிலும் கொண்டாட வேண்டிய அப்போஸ்தலிக்க கார்மேல் குடும்ப விழா. உண்மையாகவே இது ஒரு திருவிழா. விழுதுகளைத் தாங்கிய வேர்:

ஸ்தாபகர் அன்னை வெரோணிக்கா ஆங்கிலேய அங்கிலிக்கன் குடும்பத்தில் அதிசய மகளாகப் பிறந்து ஆழமான விசுவாசத்தில் வேரூன்றி வளர்ந்தவர். மூவொன்பது ஆண்டுகள் முன்னோரின் பக்தி வாழ்வில் பெற்றோரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி அதே ஆண்டிறுதியில் கத்தோலிக்க விசுவாசத்தில் மாற்றம் பெற்றார்.

நற்கருணை நம்பிக்கையால் ஈர்க்கப்பட்டுத் திருமுழுக்குப் பெற்ற சம்பவம் மறக்க முடியாத ஒரு நிகழ்வு! "கார்மேல் உன்னை அழைக்கிறது." ஆண்டவரின் அருட்குரல் விடாது தொடர்கிறது. ஏழ்நாலாம் அகவையில் புனித வளனார் சபையில் துறவு வாழ்வைத் தொடங்குகின்றார். இறை வேட்கையின் தணியாத தாகம் அவரைச் சூழ்கின்றது. வீரமிகு விசுவாசம், காத்திரமான பணிவு, மட்டற்ற முழுமையான தாழ்ச்சி, சிலுவையின் மேல் வைத்த பேரன்பு அவரைக் காவிச் செல்கின்றது. இவ்வாறு இறை ஏவுதலால் உந்தப்பட்டு, பிரான்ஸ் நாட்டில் பயோன் எனும் இடத்தில் புதியதொரு சபைக்கு வித்திடுகின்றார். புதிய குழந்தை உதயமாகின்றது காலத்தின் தேவை உணர்ந்து, இந்திய மண்ணிலே கல்விப்பணி புரியக் கனவு கண்டார். இளம் யுவதிகளின் எதிர்காலத்தை முன் நோக்கி அவர் பார்வை சென்றது. அவரது கனவு நனவாகி இன்றுகாவியமாகிநிற்கின்றது. இறைவனதுவழிநடத்தல், அவரின் உடனிருப்பு மிகமிக அற்புதமானது, வியப்பானது. உயிரையும் துச்சமென மதித்து முன்னெடுத்த அவரின் மேற்சொல்லப்பட்ட பணிகள் வரலாற்றில் பதிக்கப்பட்டவை. கலிகட்டில் கால்பதித்து, ஆரம்பித்த கல்விப் பணி, இன்று வியப்புக்குரிய முறையில் வளர்ந்து, விரிந்து, உயர்ந்து, ஓங்கிப் பல கல்வி நிறுவனங்களைத் தோற்றுவித்துள்ளது.

இந்தியாவில் முதன்முதல் கல்லூரியான புனித அன்னாள் கல்லூரியைத் தொடர்ந்து பற்பல கல்விசார் நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டு கல்வித் தாரகைகளாக ஒளிபரப்புகின்றன. அப்போஸ்தலிக்ககார்மேல்சபைஸ்தா- பகி அன்னை வெரோணிக்காவினால் விதைக்கப்பட்ட வித்து பெரியதொரு விருட்சமாக வளர்ந்தோங்கி இன்று மிளிர்ந்து கொண்டிருக்கின்றது. அவரது முற்போக்கு சிந்தனை, தூரநோக்கு, ஆன்மீக ஆதாரம், நீண்ட காலத்திட்டம், இந்தியாவைத் தாண்டி இலங்கை, பாகிஸ்தான், குவெய்ற், பாஃறின், கென்யா வரை வியாபித்து நிற்கிறது.

இந்திய வரலாற்றின் நூற்றைம்பது ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடும் அதேவேளை ஈழத்தில் கால் பதித்த நூறு ஆண்டுகளையும் 2021ல் முன்னெடுக்கின்றனர்.

அற்புதத்திருப்பம்ஈழத்திலும்உதிக்கின்றது கார்மேல் ஒளிக்கீற்று. அன்னை வெரோணிக்காவும் மேரி யோசப்பும் 1872 இல் சிரேஸ்ட தாயாரால் இந்தியாவுக்கு அனுப்பப்படுகின்றார்கள். இந்தியா செல்லும் வழியில் இலங்கை காலித்துறைமுகத்தில் எட்டு நாட்கள் தரித்து நிற்கவேண்டி நேரிட்டது. கப்பலுக்காகக் காத்திருந்த அந்த நாட்கள் இலங்கை மண்ணிற்கான ஏக்கத்தை அவர் உள்ளத்தே உண்டுபண்ணியது. மறைபோதகர்களின் வருகை, அவர்களது பணி, ஒருவித இறை வாஞ்சையைக் கிளறி விட்டது. ஈழ மணித்திருநாட்டை மீண்டும் எப்போது காண்பேன் என அவர்கள் ஏங்குகிறார்கள்.

நீண்ட நிறைவான நூறாண்டுகள் அவ் ஏக்கம் இயக்கமாகி, பாதைகள் பயணங்களாகி, பணி நிறைவைக் கண்கூடாகக் காண்கின்றனர். 1922 மாசித்திங்கள் ஐந்தாம் நாள் திருமலையில் அப்போஸ்தலிக்க கார்மேல் சகோதரிகள் தம் வருகையால் முத்திரை பதிக்கின்றார்கள்.

அருட்சகோதரிகள் கிளயா கிளமென்ஸ், கிறசென்ஸ் யுஸ்ரின் ஆகியோர் அங்கு கல்விப் பணியை ஆரம்பிக்கின்றார்கள். ஏற்கனவே பணியாற்றிய குழுனி சபையினர் அங்கிருந்து விலக இருந்தமையால் அவ்விடம் அப்போஸ்தலிக்கக் கார்மேல் சகோதரிகளுக்குக் கிடைக்கப்பெற்றது. மேதகு ஆயர் அதி வண. கஸ்ரன் றொபிஸே இச்சகோதரிகளை அழைத்து பணிதொடர வேண்டிய ஒழுங்குகளை மேற்கொண்டார்.

இன்று திருமலை, மட்டக்களப்பு, பதுளை, கொழும்பு, யாழ்ப்பாணம், சிலாபம், குருணாகல், கண்டி, மன்னார், காலி, நீர்கொழும்பு ஆகிய இடங்கள் கார்மேல் அருட்சகோதரிகளின் பணித்தளங்களாகும். ஆயிரமாயிரம் அருள் வரங்களைப் பொழிந்து இவ்வழியாய்ப் பயணித்த இறைவன் இதோ அருள் மழையையே கொடையாக்கினார்.

### அன்று தொட்டு இன்றுவரை ஆற்றிவரும் அருட்பணிகள்

ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு, வசதி வாய்ப்புக் குறைந்தோருக்கு, இளம் யுவதிகளுக்கு, சிறுவர்களுக்குக் கல்வி வாய்ப்பு.

பாடசாலைகள் தோற்றுவிப்பு: அவற்றிற்குப் பக்கபலமாக விடுதிகள், அனாதை இல்லங்கள், தங்குமிட வசதிகள் முதியோர் இல்லங்கள், சிறுவர் பராமரிப்பு நிலயங்கள், தையல் வகுப்புகள் ஏனைய பங்குப்பணிகள், அருட்சாதன ஆயத்த வகுப்புகள்.

### போர்க் காலங்களில் மக்களோடு உடனிருந்து ஆற்றிய சேவைகள்

சுனாமிப் பேரலைத் தாக்கங்களின் பின் மக்கள் மத்தியில் தீவிர உளநல சமூகசேவை இயற்கை அனர்த்தங்களின் பின் மக்களின் தேவையுணர்ந்து ஆற்றும் பணி. காலத்தின் இடத்தின் தேவையொட்டிய சேவை- களைத் தொடர்கின்றனர். இவையனைத்திற்கும் இறைவனுக்கு நன்றிப் பாமாலை சாற்றுகின்றோம்.

**அருட்சகோதரி எலிசபெத் (AC)**

# 200 ஆம் ஆண்டை நோக்கிப் பயணிக்கும் போர்டோவின் திருக்குடும்ப சபைச் சகோதரிகள்

**ஈழத்தில் சங்கமித்த ஐரோப்பிய முத்துக்கள்**

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

### அருட்சகோதரி விசிற்றேஷன் உவேலன் (மாறி யோசவின்)

ஆவணி மாதம் இலங்கைக்குத் திரும்பி வந்தார். மீளவும் யாழ் வந்து தனது கல்விப்பணியை ஆர்வமுடன் தொடந்தார்.

1952ம் ஆண்டு தை மாதம் குழுத் தலைவிக்கு 2வது ஆலோசகராகவும் நியமிக்கப்பட்டார். (Typing) தட்டச்சு தெரிந்தபடியால் எழுத்து வேலைகளுக்கு உதவியாகவும், பிள்ளைகளையும் நன்கு பராமரித்து அன்புடன் உதவி செய்தார். ஆரம்ப பாடசாலையின் அதிபராகவும் தியாகத்துடன் தன் பணிகளை நிறைவேற்றினார். 1953ம் ஆண்டு ஐப்பசி 24ம் திகதி முதல் ஆலோசகராக நியமிக்கப்பட்டார். பரம்பரை நோயான மூட்டு வாதத்தினால் துன்புற்றா. அவவின் குடலில் எரிவும் சிறுகட்டிகளும் காணப்பட்டபடியால் கொழும்பு வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்று நற்சுகத்துடன் யாழ்ப்பாணம் வந்தார். 1955ம் ஆண்டு தை மாதம் 13ம் திகதி யாழ் மடத்திற்குத் தலைவியாக நியமிக்கப்பட்டார். எல்லாக்குருக்களும் சகோதரிகளும் மகிழ்ச்சியுடன் இவரை வரவேற்றனர்.

1957ம் ஆண்டு ஆடி மாதம் 2-14 வரை தலன்ஸ்சில் நடைபெற்ற பொதுச்சங்கத்திற்கு ஒரு பிரதிநிதியாகத் தெரியப்பட்டபடியால், கொழும்பிலிருந்து எல்லாவற்றையும் முடித்துக்கொண்டு ஐப்பசி 13ம் திகதி இலங்கைக்குத் திரும்பி வந்தார். 1958ம் ஆண்டு புரட்டாதி 12ம் திகதி முதலாவது யாழ் மாகாணத் தலைவியாக நியமிக்கப்பட்டார். அந்த மாதத்திலேயே அவரின் அருமை தாயார் இறந்து விட்டார். 1961ம் ஆண்டு 2ம் முறையாக பதவி புதுப்பிக்கப்பட்டது. 1964ம் ஆண்டு புரட்டாதி 12ம் திகதி 3ம் முறையாகவும், 1967ம் ஆண்டு புரட்டாதி 12ம் திகதி திரும்பவும் யாழ் மாகாணத்திற்கு 4ம் முறையாக நியமிக்கப்பட்டார். 1968ம் ஆண்டு றோமில் நடைபெற்ற அமர்விலும் பங்குபற்றி 1969ம் ஆண்டு நடைபெற்ற பொதுச்சங்கத்திலும், பங்குபற்றி, ஆவணி மாதம் யாழ் திரும்பினார். 1970ம் ஆண்டு இவவின் மாகாணத் தலைவிப் பதவி நிறைவெய்தியதும், யாழ் மடத்திற்கு மாசி மாதம் தலைவியாக நியமிக்கப்பட்டார். 1973ம் ஆண்டு சித்திரை மாதம் இலங்கையை விட்டு ஐரோப்பா சென்று கிளேன் அனுப்பப்பட்டார்.

சிஸ். விசிற்றேசன் பரந்த அறிவும் ஞானமும் கொண்டவ. யாழ் மாகாணத்திலே, சுதேச சகோதரிகளின் வளர்ச்சியிலே மிகவும் கரிசனை கொண்டிருந்தா. கூரிய பார்வையும் அகன்ற தரிசனமும், அழகிய முகபாவனையும் கொண்டவ. தனது பதவிக் காலத்திலே, எல்லாக் குழுக்கள்குழுச்சகோதரிகள்பற்றிநன்குஅறிந்திருந்தார். அவரவர் தேவைகளை தானாகவே செய்து மகிழ்விப்பா. சிறிய வயதில் இருந்தே பெற்றோர் வழியாக பெற்ற விசுவாசமும் இறை நம்பிக்கையும், அவரின் பொறுப்பான பணிக்கு உறுதுணையாயிருந்தது. பார்ப்பதற்கு கம்பீரமாக, பயமாக இருந்தாலும், ஆளுமை நிறைந்தனவாக. திருக்குடும்ப சபையின் ஆன்மீகத்தை வாழ்ந்து காட்டினா. இந்த நினைவாலேயே சென்ற இடமெல்லாம் நற்பணியாற்றினார்.

எவ்வளவு உடல் வருத்தம் இருந்தும் அதைப் பொருட்படுத்தாது இறுதிவரை பணியாற்றி 1998 பங்குனி மாதம் 27ம் திகதி Clare இல்லத்தில் இறைவனடி சேர்ந்தார். இவரால் உருவாக்கம் பெற்ற பல சகோதரிகள் தரமான அறிவாளிகளாக மருத்துவர்களாக, பணி செய்வது இறைவனுக்கும் எம் சகோதரிக்கும் மகிமையுண்டாகும்.

### சிஸ். றேமன்ட் (கத்தறீன்)

அயர்லாந்தில் உள்ள மாவட்டத்தில் பொகேறாட் என்னும் இடத்தில் ஜோன் றாவ்ரகுக்கும் அனி கீர்வனுக்கும் மகளாக 1893ம் ஆண்டு வைகாசி மாதம் 8ம் திகதி கத்தறீன் பிறந்தார். பண்ணையாளர்களாகிய பெற்றோருக்கு 2 ஆண்கள் 3 பெண்களாக 5 பிள்ளைகள் இருந்தார்கள். கத்தறின் நவகன்னியர் இல்லம் செல்லும் போது ஒரு பெண் திருமணம் முடிந்திருந்தார். மற்றவர் வீட்டில் பெற்றோருடன் இருந்து உதவி செய்தார். 2 ஆண்களும் பண்ணையில் தகப்பனுக்கு உதவி செய்தார்கள்.

கத்தறீன் தனது கிராமத்துத் தேசிய பாடசாலையில் ஆரம்பக்கல்வியையும், பின்பு லிஸ்காட் இலுள்ள போடிங்கில் 2 வருடங்கள் இருந்து, தனது பத்தாவது வயதில் முதல்நன்மையும், மறுவருடத்தில் உறுதிப்பூசுதலும் பெற்றுக்கொண்டார். தனது கிறிஸ்தவ கடமைகளைச் செய்வதில் பக்தி பிரமாணிக்கத்துடன் விளங்கினா. 12 வயதில் அவரிற்குத் துறவற வாழ்வில் நாட்டம் ஏற்படவே ஆன்ம குருவின் ஆலோசனையுடன் தன்னை ஆயத்தம் செய்து பரீட்சையிலும் சித்தியடைந்தார். 1971ம் ஆண்டு ஐப்பசி 17ம் திகதி லிஸ்காட் தலைவியின் அமைதியுடன் கத்தறின், றொக்வெரியில் உள்ள ஆயத்தக் கன்னியர் இல்லம் சென்றார். உயரமான தோற்றமும் நல்ல குண இயல்புகளையும் கொண்டிருந்த நிலையில் 1912ல் ஆண்டு ஆவணி மாதம் 9ம் திகதி எஸ்.பி றேமன் என்னும் பெயருடன் துறவற உடையைப் பெற்றுக்கொண்டார். தான் நல்ல பயன் கொடுக்கும் துறவியாக வாழ முடிவு செய்து கொண்டார். 1914ம் ஆண்டு மாசி மாதம் 10ம் திகதி தனது முதல் அர்ப்பணத்தைச் செய்து கொண்டார். சில மாதங்களின் பின் இலங்கையின் பணிக்கு நியம-

### அருட்சகோதரி அம்புறோஸின் மார்க்

னம் பெற்றார். அமைச்சல் தாராள உள்ளத்துடன் இப்பணியை ஏற்றுக்கொண்டார். இலங்கைக்குப் புறப்படத் தயாரானபோது ஜேர்மனியுடன் போர் தொடங்கியபடியால் பயணம் தடைப்பட்டது எனவே (woodford) வூட்வோட் மடத்தில் பல வாரங்கள் தங்க வேண்டி இருந்தது. இந்த நாட்களில் சில கைவேலைகளையும்பழகிக்கொண்டார்.

(தொடரும்...)

# வழிபாடு வாழ்வாகுமா!!

21



அருட்பணி ச.ஜே.சுரேந்திரராஜா அ.ம.தி
(sjsurenomi@gmail.com)

எமது வழிபாடு
*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

**2. கிறிஸ்து பிறப்புக் காலம் :**

கிறிஸ்து பிறப்பு விழாவின் முதல் மாலை வழிபாட்டிலிருந்து திருக்காட்சி விழாவுக்கு அல்லது ஜனவரி 6-ஆம் நாளுக்குப்பின் வரும் ஞாயிற்றுக்கிழமை உட்பட வரும் நாட்கள் கிறிஸ்து பிறப்புக் காலம் ஆகும். கிறிஸ்து பிறப்பின் திரு விழிப்புத் திருப்பலி டிசம்பர் 24-ஆம் நாள் மாலையில், முதல் மாலைப் புகழுக்கு முன்னரோ பின்னரோ நிறைவேற்றப்படும். ஆண்டவருடைய பிறப்பு விழா நாளில், தொன்மையான உரோமை மரபின்படி நள்ளிரவில், விடியற்காலையில், பகலில் என மும்முறை திருப்பலி கொண்டாடப்படலாம். கிறிஸ்து பிறப்பு விழாவுக்கான எண்கிழமை கீழ்க் கண்டவாறு ஒழுங்குபடுத்தப்படுகின்றது:

**அ)** எண்கிழமையில் வரும் ஞாயிற்றுக் கிழமை அன்று அல்லது ஞாயிற்றுக் கிழமை இல்லை எனில், டிசம்பர் 30-இல் இயேசு, மரியா, யோசேப்பின் திருக்குடும்ப விழா.

**ஆ)** டிசம்பர் 26 - இல், முதல் மறைச்சாட்சியான புனித ஸ்தேவான் விழா.

**இ)** டிசம்பர் 27 - இல், திருத்தூதரும் நற்செய்தியாளருமான புனித யோவான் விழா.

**ஈ)** டிசம்பர் 28 - இல், புனித மாசில்லாக் குழந்தைகள் விழா.

**உ)** டிசம்பர் 29, 30, 31 ஆகியவை எண்கிழமை நாட்கள்.

**ஊ)** ஜனவரி முதல் நாளில், அதாவது கிறிஸ்து பிறப்பின் எட்டாம் நாளில் புனித மரியா கடவுளின் தாய் என்னும் பெருவிழா கொண்டாடப்படும் அதில் இயேசுவுக்குத் திருப்பெயரிட்டதும் நினைவு கூரப்படும்.

ஜனவரி 2முதல் 5வரையுள்ள நாட்களில் வரும் ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்து பிறப்பு விழாவுக்குப்பின் வரும் 2-ஆம் ஞாயிறு ஆகும். ஆண்டவருடைய திருக்காட்சி ஜனவரி 6-இல் கொண்டாடப்படும். ஆனால் அது திருநாளாகக் கடைப்பிடிக்கப்படாத இடங்களில், ஜனவரி 2 முதல் 8 வரையுள்ள நாட்களில் வரும் ஞாயிற்றுக்கிழமை அன்று கொண்டாடப்படும் விழா ஆகும். ஜனவரி 6-ஆம் நாளுக்குப்பின் வரும் ஞாயிற்றுக்கிழமை ஆண்டவருடைய திருமுழுக்கு விழா ஆகும். (திருவழிபாட்டு ஆண்டு, உரோமைப் பொது ஆண்டுக் குறிப்பேடு பற்றிய பொது விதிகள், 32-38).

**3. தவக்காலம் : பாஸ்கா**

கொண்டாட்டத்துக்கு முன்னேற்பாடாகத் தவக் காலம் அமைந்துள்ளது. ஏனெனில் கிறிஸ்தவப் புகுமுகச் சடங்கின் பல படிகள் வழியாக ஆயத்தக் கிறிஸ்தவர்களும், தங்கள் திருமுழுக்கை நினைவுகூர்ந்து தவத்தில் ஈடுபடும் நம்பிக்கையாளரும் பாஸ்கா மறைநிகழ்வைக் கொண்டாடத் தக்க மனநிலை அடைவதற்குத் தவக் காலத் திருவழிபாடு வழிவகுக்கின்றது. ( திருவழிபாட்டு ஆண்டு, உரோமைப் பொது ஆண்டுக் குறிப்பேடு பற்றிய பொது விதிகள், 27).

**4. பாஸ்குக் காலம் :**

உயிர்ப்பு ஞாயிற்றுக்கிழமை முதல் பெந்தக்கோஸ்து பெருவிழாவரையுள்ள ஐம்பது நாட்கள் ஒரே விழா நாளாக, ஒரே 'மாபெரும் ஞாயிற்றுக்கிழமையாக" மகிழ்வுடனும் அக்களிப்புடனும் கொண்டாடப்படும். இந்நாட்களில் சிறப்பாக "அல்லேலூயா" பாடப்படும். இக்காலத்தில் வரும் ஞாயிற்றுக்கிழமைகள் பாஸ்கா ஞாயிற்றுக்கிழமைகளாகக் கருதப்படும். உயிர்ப்புப் பெருவிழாவுக்குப்பின் வரும் ஞாயிற்றுக்கிழமைகள், பாஸ்கா 2, 3, 4, 5, 6, 7-ஆம் ஞாயிறு என அழைக்கப்படும். இந்த 50 நாட்களைக் கொண்ட இப்புனித காலம் பெந்தக்கோஸ்துப் பெருவிழாவுடன் முடிவடையும். ( திருவழிபாட்டு ஆண்டு, உரோமைப் பொது ஆண்டுக் குறிப்பேடு பற்றிய பொது விதிகள், 22, 23).

**5. பொதுக்காலம் :**

தமக்கு உரிய தனிப் பண்புகள் உள்ள காலங்களுக்குப் புறம்பே, ஆண்டுச் சுழற்சியில் 33 அல்லது 34 வாரங்கள் எஞ்சி நிற்கின்றன. இவற்றில் கிறிஸ்துவின் மறை நிகழ்வின் யாதொரு சிறப்பு நிகழ்வும் கொண்டாடப்படுவது இல்லை. மாறாக, கிறிஸ்துவின் மறை நிகழ்வே முழுமையாக நினைவுகூரப்படுகின்றது. இது சிறப்பாக ஞாயிற்றுக்கிழமைதோறும் நிகழ்கின்றது. *(தொடரும்...)*

# உள்ளவாறே பேசுதலும் நன்றியுணர்வும்

எங்களது உள்ளத்தின் உண்மைத்தன்மையை உணர்ந்து அன்புடன் பேச ஆரம்பிப்போம். உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசாதிருப்போம். பேச வேண்டும் என்ற சந்தர்ப்பம் எழும்போது மகிழ்வுடன் பேச முற்படுவோம். எவ்வளவிற்கு எவ்வளவு எங்களது பேச்சைக் குறைக்கின்றோமோ அவ்வளவிற்கு அவ்வளவு ஆற்றல் அதிகரிக்கும். சிலர் அதிகமாகப் பேசிக்கொண்டிருப்பார்கள். அவர்களுக்குச் சலிப்புத்தட்டாது.

கேட்பவர்களுக்குப் பெரும் தொல்லை. எங்களது பேச்சுக்களை ஆக்கபூர்வமானதாக அமைத்துக் கொள்ளுவோம். உள்ளத்தில் அன்பு அமைதி, தெளிவு, கனிவு இருக்கும்பொழுது வெளிப்படும் வார்த்தைகள் வசீகரமானவையாய் பேசுவோருக்கும் கேட்போருக்கும் இனிய அனுபவத்தைத் தோற்றுவிப்பவையாய் இருக்கும். எனவே, உள்ளதை உள்ளவாறு பேசி உவப்புடன் வாழ எத்தனிப்போம்.

எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நன்மையே செய்து நன்றியுணர்வுடன் வாழுவோம்.

ஒரு உருவகக் கதை. ஒருமுறை ஒரு கழுகு ஒரு வேடன் விரித்த வலையில் சிக்கிவிட்டது. வேடன் கழுகின் சிறகுகளை வெட்டிக் கழுகைக் கட்டி வைத்திருந்தான். அப்பொழுது அவ்வழியே வந்த ஒரு பெரியவர் காசு கொடுத்து அக் கழுகை வாங்கித் தனது வீட்டிற்குச் சென்று அக்கழுகை வளர்த்து வந்தார். சிறகுகள் வளர்ந்ததும் பெரியவர் கழுகைப் பறக்க விட்டார். பறந்து சென்ற கழுகு முயல் ஒன்றைக் கௌவி வந்து பெரியவருக்குக் காணிக்கையாகக் கொடுத்துவிட்டுப் பறந்து சென்றது. இதனைக் கண்ணுற்ற நரி கழுகோடு பேசியது. 'நீ வேடனிடம் அந்த முயலைக் கொடுத்திருந்தால் அவன் திரும்பவும் உன்னைப் பிடிக்காமல் இருப்பான். பெரியவரிடம் முயலைக் கொடுத்ததால் உனக்கு என்ன லாபம்?' என்றது. கழுகு சொன்னது: 'உனது சிந்தனை தவறு. ஆபத்தில் என்னைக் காப்பாற்றிய



பெரியவருக்கு எனது நன்றியைத் தெரிவிக்கவே முயலை நான் காணிக்கையாக்கினேன். உதவி வழங்கியவருக்கு நன்றியோடு வாழ்வதுதான் பண்புள்ள செயல். அதுதான் நல்லவர்களுக்கு அழகு.

**புன்னகையும் பொறுப்புணர்வும்**

'புன்முறுவல் அகத்தில் தெரியும் ஒரு வளைகோடு, ஆனால் அது வாழ்க்கையில் எத்தனையோ காரியங்களைத் நேராக்குகின்றது.' என்று வரைகின்றார் ஓர் ஆங்கில எழுத்தாளர். பிள்ளைகளே, புன்னகை பூத்த முகத்தால் பிறர் மனங்களில் மகிழ்ச்சியை விளைவிக்க முனையுங்கள். பழைய உறவுகளைப் புதுப்பிக்கவும் புதிய உறவுகளைத் தோற்றுவிக்கவும் புன்னகை உதவுகின்றது. கபடற்ற சின்னஞ் சிறுசுகளின் புன்னகையை உங்களுடையதாக்குங்கள்.

அருட்பணி. வின்சன் பற்றிக்

நாமே நமது நல்வாழ்விற்குப் பொறுப்பு என்பதை நினைத்துக் கொள்வோம்.

**வாழ்வா அல்லது சாவா என்று**
**தீர்மானம் எடுப்பது நாங்களே. எங்களது**
**மேலான தேர்வு எங்கள்**
**கைகளிலேயே தங்கியுள்ளது.**
**எங்களது வாழ்விற்கு நாங்களே பொறுப்பு**
**என்பதை உணரும்பொழுது நாங்களாகவே**
**வாழ்வியல் நியமங்களைக் கற்று**
**ஒழுகுவோம்.**
**பொறுமையோடு பொறுப்புணர்வைச்**
**சுவீகரித்துக் கொண்டு,**
**பொன்னான வாழ்வைப் புடமிட்டு**
**இன்புறுவோம்.**

## இளையோரே எழுந்திடுங்கள்...

புனித டொன்பொஸ்கோவின் நினைவு நாளில் இளையோரை நினைவுகூர்வோம். அவர்களின் வாழ்வு வானில் பேரொளி நிரம்ப வாழ்த்துவோம். இளையோரே! உங்களைப் பாராட்டும்போது அடக்கமாயிருங்கள். உங்களை விமர்சிக்கும்போது உண்மையுடன் இருங்கள். நேசிக்கும்போது அன்புடனிருங்கள். திருத்தும்போது பணிவுடன் இருங்கள். முடிவெடுக்கும் போது தீர்க்கமாயிருங்கள். ஒதுக்கும் போது துணிவுடன் இருங்கள். விவேகானந்தர் கூறினார் "நூறு இளைஞர்களை உசுப்பேற்றுவோம். இணைந்து நீங்கள் இயக்கமானால் உங்களால் முடியும். உலகை மாற்றிட! எழுங்கள் நம்பிக்கையுடன் புனித டொன்பொஸ்கோவின் வழிகாட்டலில் திரு அவையுடன் இணைந்து பயணிப்போம்.

## திருவிவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி -01

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 2 | | | 3 |
| | ■ | 4 | 5 | | 6 | | |
| | 7 | | ■ | | | ■ | |
| 8 | | | | | | 9 | |
| | | 10 | | | ■ | | |
| | | | ■ | 11 | | | |
| | | 12 | | | | | |
| ■ | | ■ | 13 | | | | |

**மத்தேயு நற்செய்தி**

**இடமிருந்து வலம்:**

1. எகிப்திலிருந்து என் மகனை அழைத்து வந்தேன் என்று இவர் மூலமாக ஆண்டவர் உரைத்தது நிறைவே-றியது. (7 எழுத்துக்கள்)
5. இதனைக் கண்டோம் என்று ஞானிகள் கூறியபோது ஏரோதன் கலங்கினான். ( 4 எழுத்துக்கள்)
8. தீர்ப்பு நாளில் மனிதர் பேசும் ஒவ்வொரு வீண் வார்த்தைக்கும் இதனைக் கொடுக்க வேண்டும். (4 எழுத்துக்கள்)
10. பரிசேயரே மக்களை உங்கள் சமயத்தில் சேர்க்கநாடு என்றும் இது என்றும் பாராமல் அலைகின்றீர்களே (3 எழுத்துக்கள்)
11. கணவன், மனைவி, பெற்றோர் பிள்ளைகளுக்கு இடையில் உள்ளதை இவ்வாறு கூறுவர் (3 எழுத்துக்கள்)
12. உங்களில் பெரியவராய் இருக்க விரும்புபவர் இவ்வாறு இருக்கட்டும் (5 எழுத்துக்கள்)
13. மானிடமகன் வருகையின் போது இதனோடும் மாட்சியோடும் மேகங்கள் மீது வருவார். (4 எழுத்துக்கள்)

**மேலிருந்து கீழ்**

1. இயேசு - பலியை அல்ல இதனையே விரும்புகிறேன் (7 எழுத்துக்கள்)
2. இச்சிறியோரில் ஒருவருக்கு இப்பாத்திரத்தில் நீர் கொடுப்பவரும் கைமாறு பெறாமல் போகார் (4 எழுத்துக்கள்)
3. இறுதிவரை இவ்வாறு இருப்பவரே மீட்படைவர்.(4 எ)
4. நான் உனக்கு இதனைக் காட்டியதுபோல நீயும் உன் பணியாளருக்குக் காட்டியிருக்க வேண்டும். இயேசு(5 எ)
6. இதனைப் பெறுவதே எமது கிறிஸ்தவ வாழ்வின் இலக்காக இருக்கவேண்டும் (3 எழுத்துக்கள்)
7. பழைய ஏற்பாட்டில் மோசேயின் கட்டளைப்படி இந்தச் சான்றிதழைக் கொடுத்து மனைவியை விலக்கி விடலாம்.
9. இயேசு இதனைக் கொண்டதனால் பார்வையற்றோரின் விழிகளைத் தொட்டார் (3 எழுத்துக்கள்)
11. உங்கள் மனம் ஆர்வமுடையதுதான். ஆனால் இதுவோ வலுவற்றது என்றார் இயேசு (3 எழுத்துக்கள்)

நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி:

ஆசிரியர்
புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்
360, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

## தாத்தா பாட்டிகளையும்,

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வயது முதிர்வு என்பது ஒரு கொடையாகும் என்றுரைத்த திருத்தந்தை, முதியோர் என்பவர்கள், தங்கள் வாழ்வு அனுபவத்தை இளைய தலைமுறைக்கு எடுத்துரைக்கும் இணைப்புச் சங்கிலியாக உள்ளனர், என்று கூறினார்.

முதியோர் தாங்கள் பெற்றதை மற்றவர்களுக்குக் கொடுத்துச் செல்வது, மற்றும், சமுதாயத்தின் அடிப்படை ஆதாரத்தைப் பாதுகாப்பது போன்ற முக்கிய பணிகளைப் பெற்றுள்ளனர் என்பதை எண்ணிப்பார்க்காமல், இன்றைய சமுதாயம் அவர்களை மறந்து செயற்பட்டு வருவது குறித்துக் கவலையை வெளியிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தாத்தா, பாட்டிகளும், பேரக்குழந்தைகளும் ஒருவரையொருவர் அறிந்து, நெருக்கமாக இருக்கவேண்டியதன் முக்கியத்துவம் குறித்தும் வலியுறுத்தினார்.

## திருவழிபாடுகள் நிறைவேற்ற பணம் பெறமுடியாது பிலிப்பீன்ஸ் ஆயர் பேரவை முடிவு

பிலிப்பீன்ஸ் நாட்டில், திருப்பலிகள், மற்றும், திருமணம் போன்ற அருளடையாளங்களை நிறைவேற்றுவதற்கு, அருட்பணியாளர்களுக்குப் பணம் வழங்கும் பழக்கம் இரத்துசெய்யப்படுமாறு, அந்நாட்டின் அனைத்து மறை மாவட்டங்களுக்கும், ஆயர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

பிலிப்பீன்சின் கத்தோலிக்க ஆயர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில், சிறப்புத் திருவழிபாடுகளை நிறைவேற்றுவதற்குப் பணம் பெறும் முறையை இரத்து செய்திருப்பது, திருவிவிலியத்தின்படி, வறியோரை அன்புகூரவேண்டும் என்ற கத்தோலிக்கத் திருஅவையின் போதனைகளுக்கு ஒத்ததாய் உள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

நாம் ஒருவர் ஒருவருக்கு, குறிப்பாக, நம் ஏழைச் சகோதரர், சகோதரிகளுக்கு, மிகத் தாராளமனத்துடன் பணியாற்றவேண்டும் என்று கடவுள் நமக்கு அழைப்பு விடுக்கிறார் என்றுரைத்துள்ள ஆயர்கள், அருட்பணியாளர்களுக்குப் பணம் கொடுப்பது, வறியோர், அருளடையாளங்களைப் பெறுவதற்குத் தடையாய் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளனர்.


## விற்பனைக்கு




அமரர் அருட்பணி யேசுதாசன் அடிகளாரின் 'இறுதி அஞ்சலி' நூல் பாதுகாவலன் வெளியீடாக புதிய பதிப்புவெளியாகியுள்ளது. இறந்தோர் நல்லடக்கத்தின் போதும் இல்லங்களில் இறந்தோர் நினைவு வழிபாடுகளை நடாத்தவும் பல வழிபாட்டு ஒழுங்குகளுடன், புதிய மொழி பெயர்ப்பில் வெளிவந்துள்ள இந்நூலின் விலையானது ரூபா 300 மட்டுமே. மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள விரும்புவோர் புனித வளன் அச்சகத்துடன் தொடர்புகொள்ளவும்.



## 3ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 06 . 02 . 1947

விண்ணில் 07 . 02 . 2018



AD 13

அமரர்

### திருமதி ஆசீர்வாதம்பிள்ளை லில்லி அக்னஸ்

மாசற்ற அன்பு மறைந்து
மூன்றாண்டுகள்
ஆனதம்மா
இப்போதுதான்
எண்ணற்ற விம்பமாய் தெரிகிறீர்கள்
ஒவ்வொரு கணமும்
ஜனனித்துக்கொண்டு இருக்கிறீர்கள்
திரும்பும் திசையெல்லாம்
வெறிச்சோடிக் கிடக்கிறது.
அம்மா இல்லாத உலகம்
எம் மனங்களும் தான்!
தணியாத தாகமாய்
எம்மோடு வாழ்கிறீர்கள்
நிலையான வீடு கிடைக்க
உமக்காகப் பிரார்த்திக்கிறோம்.

பிரிவுத்துயரில்
பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்

செல்வபுரம்,
முல்லைத்தீவு



## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 . 06 . 1939

மறைவு 30 . 01 . 2019



AD 10

அமரர்

### திருமதி அன்ரனெற் றோஸ் மலர் வேதநாயகம் (மணி)

'நேர்மையுள்ளோர் மக்கள் மனதில் என்றும் வாழ்வர்' (திபா 112:6)

7, அச்சக வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்



## விண்ணக வாழ்வில் 1ம் வருட நினைவஞ்சலி

மலர்வு 14 . 02 . 1947

உதிர்வு 03 . 02 . 2020



AD 09

அமரர்

### சவரிமுத்து ஆரோக்கியநாதர்

(நிரந்தர மறையாசிரியர்)

'நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன். என் ஓட்டத்தை முடித்து விட்டேன் விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்' (2 திமோ.4:7)

யாழ் மறை மாவட்ட நிரந்தர மறை ஆசிரியரே
ஐம்பது ஆண்டுகள் நிறைவான பணியாற்றினீரே
ஊருக்கு உத்தமராய் உலகறிய வாழ்ந்தவரே
நிறைவான அன்பாலே எம்மை வளர்த்துச் சென்றீரே
துன்பத்தை எமக்கிங்கு தந்து விட்டுப் போனீரே
உற்ற துணை கதிகலங்கித் தவிக்கவிட்டு சென்றீரே
தூரத்தே மறைந்தெங்கோ தொலைவாகிப் போனீரே
கூடி இருந்தெமக்கு நல்லறிவு புகட்டி விட
ஓடி வர மாட்டீரோ? ஓய்ந்திங்கு போனோமே!

இல: 76, புலோலி தெற்கு
புலோலி

அன்புடன் நினைவுகூரும்
குடும்பத்தினர்



## விண்ணக வாழ்வின் 1ம் ஆண்டு நினைவு

மண்ணில் 28 . 08 . 1939

விண்ணில் 09 . 02 . 2020



அமரர்

### சவிரிமுத்து யோசவ் தேவதாசன்

"சீவியத்தில் நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள்"

அன்பும் பண்பும் நிகழ எம்மவர்க்குத் தந்தையாய்
கண்டிப்பிலும் அரவணைப்பிலும் அனைவருக்கும் சகோதரனாய்
எம்மவரோடு மகிழ்ந்து வாழ்ந்த எம் அன்புத்தந்தையே
உயிர் கிறீஸ்துவில் கலந்தாலும்
உடல் கல்லறையில் உறங்கினாலும்
உணர்வுகளால் எம்மோடு உறவாடும்
உம் இனிய உள்ளத்திற்கு
எம் இதய விம்மல்களைக் காணிக்கையாக்கி
நீர் இறைவனிடம் இளைப்பாறிருக்கப் பிரார்த்திக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

AD 11


## சிறுவர் தொழிலாளர்.......

(7ம் பக்கத் தொடர்ச்சி)

**03. சமூக ரீதியான பாதிப்பு**

கல்வியறிவைச் சரியாகப் பெறமுடியாத சூழலால் தங்களது, வாழ்நாள் முழுவதும் மிகக் குறைந்த சம்பளத்துடனும், உழைப்பு சுரண்டப்படும், சமூகத்தில் ஒரு மதிப்பான, முன்னேற்றகரமான ஒரு நல்ல நிலைமையை அடைய முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

**சிறுவர் தொழிலாளர்களைக் குறைப்பதற்கான வழிகள்**

- சிறுவர்கள் அனைவருக்கும் கட்டாயக் கல்வி, தொடக்கக் கல்வி சரியான முறையில் வழங்கப்பட வேண்டும்.
- பாடசாலை, சமூகத்தில் குழந்தைத் தொழிலாளர்களை ஒழிப்பதற்கான விழிப்புணர்வு வழங்கப்பட வேண்டும்.
- வறுமையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒவ்வொரு நாட்டின் அரசாங்கமும் வாழ்வாதாரத் திட்டங்களை வழங்குவதோடு, சுயதொழில் முயற்சிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.
- சிறுவர்களைத் தொழில்களில் ஈடுபடுத்துபவர்களுக்கு எதிராக தண்டனைகள் மிகச் சரியான முறையில் இறுக்கமாக வலுவானதாக வழங்கப்பட வேண்டும். அத்துடன் தண்டனைகளும் அதிகரிக்கப்பட்ட வேண்டும்.
- பெற்றோர்கள் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒவ்வொரு குழந்தையினதும் உடலியல், உளவியல் சமூக ரீதியாக முன்னேற்றகரமான எதிர்காலத்தைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தம்மாலான பங்களிப்பினை வழங்க வேண்டும்.

இதனடிப்படையில் சிறுவர்களைக் கல்வி, ஆளுமை, சமய, சமூக ரீதியில் வளப்படுத்தி, கல்வியிலும் முன்னேற்ற கரமான வாழ்க்கைப் பாதையில் நடத்தி செல்வதும் காலத்தின் கட்டாயமாகவுள்ளது.


## 5ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 23 . 09 . 1927

மறைவு 02 . 02 . 2016



அமரர்

### தியோகுப்பிள்ளை மரியதாஸ்

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்" (யோவான். 11:25)

படைப்பின் முதல்வனே இவ்வுலக வாழ்வில்
தந்தையாக, எமக்கு அளித்த அடியான்
தியோகுப்பிள்ளை மரியதாஸ் அவர்களை
உமது நீதித் தீர்ப்பில் கருணை காட்டி, தண்டனைத்
தீர்ப்பிலிருந்து விடுவித்து, விண்ணக
வான் வீட்டில் சேர்த்தருளும்.

குடும்பத்தினர்.

AD 12



மணியம்தோட்டப்பங்கில் 31 சிறார்களுக்கு உறுதிப்பூசுதல் திருச்சடங்கை யாழ் ஆயர் அவர்கள் கடந்த தை 23ம் திகதி நிறைவேற்றினார். இச் சிறார்களை ஆன்மீக ரீதியில் பங்குத் தந்தை அருட்பணி எஸ். எம். செபஸ்ரியன் அமதி அடிகளார் பக்குவப்படுத்தியிருந்தார்.



கிறிஸ்தவ ஒன்றிப்பு வார இறுதிநாள் நிகழ்வு யாழ். பரியோவான் தேவாலயத்தில் (அங்கிலிக்கன்) கடந்த தை 25ம் திகதி நடைபெற்றது. இவ் இறுதிநாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் கலந்து கொண்டார். இந்நிகழ்வில் சிறப்புரையாற்றிய ஆயர் அவர்கள் தற்காலத்தில் கிறிஸ்தவ ஒன்றிப்பு வாழ்வின் முக்கியத்துவத்தை உணர்த்தி கிறிஸ்து இயேசுவின் பேரில் நாம் ஓர் உடலாக இணைந்து இறை விசுவாசத்தைப் பரப்பவேண்டும் என வேண்டி நின்றார்.



ஆனையூர் அடைக்கல அன்னை ஆலய இளையோர் மன்றத்தினர் தமது பாதுகாலராம் புனித யோசேப் வாஸ் திருநாளைக் கடந்த தை 31ம் திகதி கொண்டாடி மகிழ்ந்தனர்.

பங்குமக்களோடு திருப்பலியில் இணைந்து மன்றாடியதோடு அன்றையநாள் முழுவதும் ஆலயத்தில் தங்கி பல்வேறு நிகழ்வுகளில் பங்கெடுத்து மதிய இரவுணவுகளை பங்குத் தந்தையுடன் இணைந்து உண்டு மகிழ்ந்தனர். இவ் இளையோர் நிகழ்வுகளைப் பங்குத் தந்தை அருட்பணி அலின் கருணாகரன் அடிகளார் சிறப்பாக நெறிப்படுத்தியிருந்தார்.



யாழ் மல்வம் பங்கு மக்களுக்கான அன்பிய யூபிலி ஆண்டுக் கருத்தமர்வு பங்குத் தந்தை லீயோ அடிகளாரால் ஒழுங்குபடுத்தப்பட்டு யாழ் அன்பியப் பணிக்குழுவால் வழி நடாத்தப்பட்டது.



வலைப்பாட்டுப் பங்கில் அன்பிய யூபிலி ஆண்டு அங்குரார்ப்பணம் 31.01.2021 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



சிரேஷ்ட ஆய்வாளரும் சட்டத்தரணியுமான திருமதி. பவானி பொன்சேகா அவர்கள் யாழ். ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களைக் கடந்த தை 26ம் திகதி ஆயர் இல்லத்தில் சந்தித்தார். இச் சந்திப்பின்போது வடக்கின் சமகால சமூக பொருளாதார அரசியல் நிலைமைகள் பற்றி ஆயரிடம் கேட்டறியப்பட்டது.



புனித வின்சென் டி போல் சபையின் மத்திய குழு உறுப்பினர்கள் தமது புதிய ஆன்மீகக் குரு அருட்பணி எஸ். நேசநாயகம் அடிகளாருடன் இணைந்து கடந்த தை 31ம் திகதி யாழ். ஆயரைச் சந்தித்து தமது இவ்வாண்டு செயற்திட்டங்களை ஆயருக்கு அறியப்படுத்தி ஆயரின் ஆசீரையும் பெற்றுக்கொண்டனர்.



நாச்சிக்குடா அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில் கடந்த ஞாயிறு தினம் திருப்பாலத்துவ சபையினரின் விழா பங்குத்தந்தை தலைமையில் கொண்டாடப்பட்டது. திருப்பாலத்துவ சபையினர் அந்நாளின் திருப்பலியை சிறப்பித்ததோடு திருப்பலியைத் தொடர்ந்து சிறார்களுக்கான பல்சுவை நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வுகளை அருட்சகோதரிகளும், ஊக்குவிப்பாளர்களும் திறம்பட ஒழுங்கு செய்திருந்தனர்.



குருநகர்ப்பங்கில் திருப்பாலத்துவசபைத் தினம் கடந்த தை 31ம் திகதி கொண்டாடப் பட்டது. புதிய பங்குத்தந்தை அருட்பணி A.J. யாவிஸ் அடிகளாரின் வழிகாட்டலிலும் உதவிப் பங்குத்தந்தையர்கள் மற்றும் ஊக்குவிப்பாளர்களின் துணையோடு பல்வேறு நிகழ்வுகளில் சிறார்கள் பங்கெடுத்தனர்.



யாழ். மறைமாவட்ட அன்பிய ஆணைக்குழு இயக்குநர் அருட்பணி A. மில்பர்வாஸ் CMF அடிகளார் தலைமையில், 25.01.2021 அன்று மறைமாவட்ட மற்றும் மறைக் கோட்ட அன்பிய இணைப்பாளர்களுக்கான கூட்டம் இடம் பெற்றது. இவ்வருடத் திற்கான செயற்பாடுகள் பற்றி ஆழமாகக் கலந்தாலோசிக்கப்பட்டது.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2021ம் ஆண்டு ஜனவரி மாதம் 31ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.